விண்ணியலும் வாழ்வியலும்

# 247 தமிழ் எழுத்துக்களில் விண்ணியல் மற்றும் மெய்யியல் (உடலியல்)



கோ. இரவிச்சந்திரன்

# விண்ணியலும் வாழ்வியலும்

## 247 தமிழ் எழுத்துக்களில் விண்ணியல் மற்றும் மெய்யியல் (உடலியல்)

**2026**

http://www.sidhariyal.com

நூலின் பெயர் : விண்ணியலும் வாழ்வியலும்
247 தமிழ் எழுத்துக்களில் விண்ணியல்
மற்றும்
மெய்யியல் (உடலியல்)

முதல் பதிப்பு : 14-02-2026

பக்கங்கள் : 96

கோ. இரவிச்சந்திரன்
**நிலா பயிற்சி மையம்**
சிவகன்யா தொப்பு, ஆழியார்
பொள்ளாச்சி
Ph. 98422 16465
email : vinniyalumvazhviyalum@gmail.com
URL: www.sidhariyal.com

# பொருளடக்கம்


1. முகவுரை 4

2. விண்ணியலும் வாழ்வியலும் 6

தமிழ் எழுத்துக்கள்

உயிர் எழுத்துக்கள் 22

அ முதல் ஃ வரை

மெய் எழுத்துக்கள் 59

க் முதல் ன் வரை

3. முடிவுரை 95

## விண்ணியலும் வாழ்வியலும்.

நான் விண்ணியலும் வாழ்வியலும் எனும் தலைப்பில் கடந்த 5 ஆண்டுகளாக Telegram chl, youtube மற்றும் Whatsapp -ல் எழுதி வருகிறேன். நான் எழுதுவதற்கு தரவுகள் நேரடியாக வான் பார்த்து அதவாது கருவரையிலிருந்து கொடிமரம் வழியாக வான் பார்த்து, மற்றும் கொடிமரத்தின் நிழல் குறித்து, அறிந்த தகவல்களின் அடிப்படையிலும், மற்றும் பஞ்சாங்க கணக்குகளுக்கும், இந்த நிழலுக்கும், வானில் நட்சத்திர, மற்றும் ராசிகளில், கோள்களின் நகர்வுகளையும், தொடர்ந்து கொடிமரத்தின் வழியாக கடந்த 10 வருசங்களாக அவதானித்து அறிந்து கொண்டது தான்.


இப்படி தொடர்ந்து பார்த்த பொழுது , தமிழ் எழுத்துக்கள் 247, மற்றும் திருக்குறள் எண்கள் 133 அதிகாரங்கள், 1330 குறள்களுக்கும் விண்ணியலுக்கும் உள்ள தொடர்பு புரிந்தது. மற்றும் தமிழ் எழுத்துக்களின் வடிவங்களுக்கு விண்ணியல் அர்த்தங்களும், மெய் இயல் அர்த்தங்களும் பிடிபட ஆரம்பித்தது. நம் தமிழர் வரலாறும், வாழ்வியலும் எவ்வளவு சிறந்தது என புரிந்ததை எழுதி இருக்கிறேன். Giza Pyramid -க்கும் திருக்குறளுக்கும் உள்ள தொடர்பு நேரில் சென்று எகிப்தில் பார்த்த பொழுது புரிந்தது. மற்றும் தமிழ்த் காலண்டர்கள் திருத்தப்படாமல் இருந்ததைப் பார்த்து தவறு இருக்கிறது என சொல்வதை விட அதை எப்படி சரி செய்வது என திருத்தப்பட்ட சித்தரியல் நாட்டியும் தயாரித்து இந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக தயாரித்துக் கொண்டு தவறுகள் இருப்பின் சரி செய்து திருத்திக் கொண்டு குழுவாக செயல்படுகிறோம்.

மற்றும் இதை குழந்தைகளுக்கு எப்படி கடத்துவது என்று, நிலா பயிற்சி மையம் எனும் NIOS home Schoolingல் 15 குழந்தைகளுடன் தினமும் வான் பார்த்து அவர்களுக்கும் , தமிழின் வழியாக புரிய வைக்க முடியும் என்ற நம்பிக்கையிலும் இதை எழுதி இருக்கிறேன். மற்றும் பஞ்சாங்க கட்டங்களை **www.Sidhariyal.com** எனும் வளைதளத்தில், நாட்காட்டி , சோதிடம் என முயற்சித்து , நம் பிறந்த நாளை இடுகை இட்டால் சோதிட கட்டமும் வருமாறு வடிவமைத்து அதை சரிபார்க்க, சோதிடர்களுக்கு இலவசமாக கொடுத்து உள்ளோம். மற்றும் கர்ப்போட்டம் பார்ப்பது எப்படி அதன்

Logic என்ன, நம் தோட்டத்தில் அடுத்த வருடம் என்ன மழை பெய்யும், எப்பொழுது பெய்யும் என குறிப்புகள் எடுப்பது எப்படி? என்றும் குழுவாக அவதானித்து 80% வெற்றியும் அடைந்துள்ளோம். இயற்கை வாழ்வியலை ஐயா நம்மாழ்வார் அவர்களோடு நான்கு ஆண்டுகள் பயணித்துக் கற்றுக்கொண்டேன். 60 சுழல் ஆண்டுகள், மற்றும் தமிழர் வரலாறு பற்றி பாண்டியன் ஐயா! அவர்களிடம் அறிந்து கொண்டேன். தற்சார்பு வாழ்வியல், மருந்தில்லா மருத்துவத்தை ஐயா healer பாஸ்கர் அவர்களோடு கடந்த 10 வருசங்களாக பயணித்து அறிந்து கொண்டேன்.

இந்த புத்தகத்தில் தவறுகள் இருக்கலாம் , அதை சரியானபடி சுட்டிக் காட்டினால் திருத்தவும் தயராக உள்ளேன். நான் இந்த புத்தகத்தில் எழுதியுள்ள கருத்துக்கள் ஆங்காங்கே படித்தும், கடைபிடித்தும் பார்த்த அனுபவங்களையும் பகிர்ந்து உள்ளேன். முதல் 500 புத்தகங்களை அடித்து அணிந்துறைக்காக இதை தயாரித்து இருக்கிறேன். அனைவரும் ஏற்றுக் கொண்டால் இதை ஒரு பாடப்புத்தகமாக பெரியவர்கள் முதலில் படித்துப் புரிந்து கொண்டு விண்ணியலோடு தொடர்பு கொண்ட தமிழை, குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க தயாராக வேண்டும்.

கோ. இரவிச்சந்திரன்.
98422 16465
vinniyalumvazhviyalum@gmail.com.
விண்ணியலும் வாழ்வியலும்.
நித்தமும் நிந்தன் நினைவுடன்.



விண்ணியலும் வாழ்வியலும்

# 247 தமிழ் எழுத்துக்களில் விண்ணியல்

மற்றும்

# மெய்யியல் (உடலியல்)

## விண்ணியலும் வாழ்வியலும்.

### தமிழ் எழுத்துக்கள்

நம் முன்னோர்கள் நமக்கு கொடுத்த கொடைகளை, மறந்த, மறைத்த மரபுகளை நினைவு படுத்துதல் இந்த நூல்..

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

திருக்குறளின் முதல் குறள்.

இந்த முதல் குறளின் உண்மையான பொருள் அறிந்து கொண்டாலே நம் தமிழ் மரபின் ஆழம் புரிந்து கொள்ள முடியும். தமிழர்களின் அறிவியல் புரிதல் எவ்வளவு உயர்ந்தது என உணர்ந்து கொள்ள முடியும்.

அகர முதல எழுத்தெல்லாம் என்பதன் பொருள் என்னவென்றால். நம் தமிழ் எழுத்துக்கள் 247. "அ" வில் ஆரம்பித்து "னௌ" வரை 247 எழுத்துக்கள். அந்த 247 எழுத்துக்கள் நம்முடைய ஆதி பகவன் சிவன் உருவானதற்கு முன்பே இருக்கிறது என பொருள்பட எழுதியிருக்கிறார் திருவள்ளுவர்.




எப்படி நம் ஆதி பகவன் சிவன் உருவாவதற்கு முன் நம் 247 எழுத்துக்களும் இருக்கிறது என திருவள்ளுவர் கூறினார்? ஆதி பகவன் சிவன் யார்? அவர் நம்முடன் பிறந்து வாழ்ந்து, நமக்கு இந்த இயற்கையை பற்றியும், இந்த உலகம், இந்த உலகில் உயிர்கள் உண்டான விதம், உலகம் உண்டான விதம், அண்டம், பேரண்டம் என வானில் தெரியும் விண்மீன்களின் உருவாக்கம் என நமக்கு சொல்லி கொடுத்தவர். நம் அண்டத்தின் பிறப்பிடமான சிவம்

எங்கே இருக்கிறது என காண்பித்ததால் அவர் சிவன் என பெயர் பெற்றார்.

நமக்கு நான்கு வேதங்களை (1. உருக்கு வேதம், 2. அதிர்வன வேதம், 3. சாம (அரசியல்) வேதம், 4. ய(தெற்கு) சூரண வேதம்) உருவாக்கி சொல்லி கொடுத்தவர். அப்படிப்பட்ட சிவன் உருவானதற்கு முன்பே இந்த எழுத்துக்கள் உருவாகி விட்டதா? திருவள்ளுவர் ஏன் அப்படி சொன்னார்?

**திருவள்ளுவர் காலம் எது?**

2400 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் அவர் திருக்குறள் எழுதி இருக்கிறார் என்றால், நம் தமிழ் எழுத்துக்கள் அதன் வடிவங்கள் நமக்கு ஏதாவது உணர்த்துகின்றனவா?





இப்பொழுது வழக்கத்தில் இருக்கும் நம் தமிழ் எழுத்து வடிவங்கள் உருவாக்கப்பட்டு எவ்வளவு காலம் ஆகிறது. இதற்கு தரவுகள் எங்காவது கிடைக்குமா? என தமிழ் நாடு முழுவதும் தேடினாலும் கிடைக்கவில்லை. அரசியல் காரணங்களால் அது கிடைக்காது என தெரிந்து கொண்டேன். தமிழ் உருவான காலத்திலிருந்து, தற்பொழுது உள்ள எழுத்துக்கள் தான் வழக்கத்தில் உள்ளதா?

தமிழ் எழுத்துக்கள் உருவான காலம் சிவன் காலம், நம் சிவன் முதல் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கி கட்டமைத்தவர். அந்த காலத்தில் ஒலியாக தமிழ் சொற்கள் இருந்தன. அதை வார்த்தைகளாக்க ஒவ்வொரு சொல்லுக்கும் ஓவியங்கள் வரைந்து வாக்கியங்களாக்கினர். அதுதான் இன்றளவும் சீன மொழியியலில் உள்ளது. எகிப்தில் Pyramid களில் உள்ள Eroclips எழுத்துக்களும் இது போன்றவையே. முதலாம் தமிழ் சங்கத்தின் காலம் சுமார் 20,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

சிவன் காலத்தில் நிலவின் ஓட்டத்தை நன்கு கவனித்து, அமாவாசை முடிந்து மூன்றாம் பிறையை மாதத்தின் முதல் நாளாக்கி மாதங்களை உருவாக்கினார். ஒரு மாதத்திற்கு 29.5 நாட்கள் என்றும், அதனால் முதல் மாதத்திற்கு 30 நாட்கள் என்றும் இரண்டாம் மாதத்திற்கு 29 நாட்கள் என்றும் வகுத்தார். அவர் காலத்திலேயே 7 கோள்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றின் பெயர்களைக் கொண்டு வாரத்துக்கு பெயரிட்டு மக்களின் அன்றாட புழக்கத்திற்கு கொண்டு வந்தார். அவர் காலத்தில் உருவாக்கப்பட்ட வாரம் இன்றுவரை மாறாமல் உலகில் உள்ள அனைத்து காலண்டர்களிலும் உள்ளது. அவர் குறிஞ்சித் திணையில் குமரிக்கண்டத்தில் இருந்து நம்மை ஆண்டவர். சேயோன் என்றால் அன்மை, சேய்மை கட்டுகளில் சேய்மை என்பது காலத்தால் நம்மைவிட மூத்தவர் எனும் பொருளில் அழைக்கப்படுபவர்.

**20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சிவன் காலத்தில் முதலாம் தமிழ் சங்கத்தால் உருவாக்கப்பட்ட சித்திர எழுத்துக்கள்.**



காலத்தை உருவாக்கியவன் சிவன். அதனால் அவன் பெயர் காலன்.

இரண்டாம் தமிழ் சங்க காலத்தில் அந்த சித்திர எழுத்திற்குப் பதிலாக ஒலி வடிவங்களுக்கு உயிர் எழுத்துக்கள் 12

ஆகவும், மெய் எழுத்துக்கள் 18 ஆகவும், உயிர் மெய் எழுத்துக்கள் 216 ஆகவும், ஆயத எழுத்து - 1 எனவும் உருவாக்கினார்கள். இரண்டாம் தமிழ்ச் சங்கத்தின் காலம் சுமார் 12600 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம். முருகன் காலத்தில் உருவாக்கப்பட்ட எழுத்துக்களின் பெயர் தமிழி.

இந்த எழுத்துக்களைக் கொண்டு சொற்களும், வாக்கியங்களும் எளிதாக உருவாக்கப்பட்டு இலக்கணமும். வகுக்கப்பட்டது. இந்த தமிழி எழுத்துக்களுக்குத் தான் தொல்காப்பியத்தில் மீண்டும் இலக்கணம் எழுதி பாதுகாத்து வந்தனர்.

**12,800 ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டாம் தமிழ்ச் சங்கத்தில் முருகனால் உருவாக்கப்பட்ட தமிழி எழுத்துக்களின் வடிவங்கள்**




முருகன் காலத்தில் சொற்களை 12 உயிர் ஒலிகள் 18 மெய் ஒலி களைக் கொண்டு எழுத்துக்கள் உருவாக்கப்பட்டது.

தொல்காப்பிய காலம் சுமார் 6000 ஆண்டுகளுக்கு




முற்பட்டது. அதனால் பின்னர் உருவாக்கப்பட்ட இப்பொழுது வழக்கத்தில் உள்ள தமிழ் எழுத்துக்கள் அப்பொழுது இல்லை. எனவேவரி வடிவங்களின் பொருள் பற்றி தொல்காப்பியத்தில் இல்லை.

தற்பொழுது வழக்கத்தில் உள்ள தமிழ் எழுத்துக்கள் மூன்றாம் தமிழ்ச் சங்கத்தால் திருமால் (பெரும் ஆள்) அவர்களால் உருவாக்கப்பட்டது. மூன்றாம் தமிழ்ச்சங்கம் தழைத்தது 3600 ஆண்டுகளுக்கு முன்பு. இந்த கணக்குகள் எல்லாம் எப்படி எடுக்க முடிகிறது என்றால். வானில் விண்மீன்களின், ராசி வடிவமைப்புகளிலும், நல்சித்திரங்களின் அணி வகுப்பிலும், அதில் நகரும் நம் கோள்களின் இயக்கத்தையும் கணக்கீடு செய்து திருமாலால் கொடுக்கப்பட்ட பஞ்சாங்கத்தினைப் புரிந்து கொண்டும், திருக்குறளின் எண்களிலும், நம் தமிழ் எழுத்துக்களின் அறிவியல் உண்மைகளையும், உள்வாங்கினால் முடியும்.



## 4000 ஆண்டுகளுக்கு முன்னால் திருமாலால் மூன்றாம் தமிழ்ச்சங்கத்தில் உருவான தமிழ் எழுத்துக்கள்.


| உயிரெழுத்துக்கள்→ மெய்யெழுத்துக்கள் ↓ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

முதலில் உயிர் எழுத்துக்கள் 12 என ஏன் முடிவெடுத்தார்கள். உயிர் எழுத்துக்கள் 12 எனவும், மெய் எழுத்துக்கள் 18 எனவும் ஆய்த எழுத்து 1 உயிர் மெய் எழுத்து 216 எனவும் எப்படி, எதன் அடிப்படையில் உருவாக்கினார்கள். நிலா ஒரு நொடியில் 1 கி.மீ. வேகத்திலும், பூமி ஒரு நொடியில், 30 கி.மீ. வேகத்திலும், சூரியன் ஒரு நொடியில் 216 கி.மீ வேகத்திலும் இந்த அண்டத்தில் அண்டத்தின் மையமான சிவத்தை நோக்கி வீடு பேறு அடைய சென்று கொண்டு இருக்கிறது என முருகன் காலத்திலேயே அறிந்து புரிந்து அதை நம் தமிழ் எழுத்துக்களில். எண்களாக வைத்து நமக்கு கொடுத்துள்ளார்கள். இந்த கணக்கீடுகளால் தான் 12,600 வருடங்களுக்கு முன்பு நடந்த குமரிக்கண்ட நீரூழியை முன்னரே கணித்து பெரும்பாலான தமிழர்களை வான் பகைவென்று இலங்கை வரை காவடியுடன் வந்து இரண்டாம் தமிழ் சங்கத்தை கபாடபுரத்தில் கட்டமைத்தார் முருகன்.

ஒரு வருடத்திற்கு 12 மாதங்கள் என சிவன் காலத்தில் உருவான காலண்டரிலேயே நம் முன்னோர்கள் அறிந்து வைத்து இருந்தனர். குமரிக்கண்ட நீரூழியில் மீண்டு வந்த மக்களின் உடனடி தேவைக்கான உணவுக்காக முருகன் மருத நிலங்களை உருவாக்கி வேளாண்மையை உருவாக்கினார்.. அது வரை உலகில்

வேளாண்மை இல்லை. பூமியின் வட கோளத்தில் இந்த நீர் தெற்கில் வடிந்து குமரிக்கண்டத்தை மூழ்கடிக்கப் போகிறது என முன்பே ஊகித்து கணக்கீடுகள் மூலம் அறிந்த முருகன், வடக்கில் நிலம் மேலே வருகிறது. நாம் வாழ்ந்த இடங்கள் மூழ்கப் போகிறது என உணர்ந்த முருகன் வடக்கில் நிலங்கள் வாழத் தகுந்தவைகளாக மாறும் வரை இலங்கையில் தண்டு ஊன்றி ஒரு 60 ஆண்டுகளாவது இருந்தால் தான், வாழத் குந்த நிலங்களுக்கு நகர முடியும், என முடிவு செய்து அதுவரை இலங்கையில் மருத நிலங்களை உருவாக்கி, உணவுத் தேவையை பூர்த்தி செய்து புதிய நிலங்களுக்கு, உணவுகளுடன், குடும்பங்களுடன், கடல்களின் (நெய்தல்) வழியாக புலம் பெயர்ந்தனர்.

அதுவரை முருகன் இரண்டாம் தமிழ்ச் சங்கத்தை கபாடபுரத்தில் நிறுவி, அடுத்தடுத்து செய்ய வேண்டிய பணிகளைப் பற்றியும், நீருழியால் நிகழ்ந்த காலமாற்றங்களை கணித்து புது சூரிய நாட்காட்டியை, பல அறிவார்ந்த விவாதங்களினால், தொடர்ந்து புணரமைத்து, பல்வேறு வகையான அறம், மறம் போன்ற வாழ்வியலுடன் கூடிய, பல்வேறு கலைகளை உருவாக்கி, தமிழ் மக்களை பல்வேறு புதிய நிலங்களுக்கு, கடல் வழியே சென்று சித்தர்களின் துணைகொண்டு, வாழத்தகுந்த இடங்களை அடையாளம் கண்டு, குடியேற்றம் செய்ய வைத்தார்கள்.




இதைத்தான் துவாபர யுகம் என்றார்கள். துவா என்றால் இரண்டு என பொருள். பர என்றால் பரந்த மருதம், நெய்தல் எனும் வாழ்வியலை வாழ்ந்தவர்களின் காலம் என பொருள்படத்தான் துவாபர யுகம் என்றனர்.




இப்படி முருகன் காலத்தில் வேளாண்மைக்காக காலத்தை துல்லியமாக அறிய வேண்டிய கட்டாயத்தால், வானில் ஆதி ஓரையை உருவாக்கி வானில் விண்மீன்களின் நகர்வை கொண்டு காலத்தை கணிக்கும் முறையை உருவாக்கினார். அவர் உருவாக்கிய முதல் ஓரைக்குப் பெயர் தான் ஆதி ஓரை. அந்த பிரகாசமான, சாய்ந்த அந்த மூன்று விண்மீன்கள் உலக்கை நட்சத்திரம் என அனைவராலும், அழைக்கப்பட்ட அந்த மூன்று நட்சத்திரங்களையும், சுற்றி இருந்த விண்மீன்களை கற்பனை கோட்டால் நல் சித்திரமாக்கி அதைசிவன் நினைவாக சிவதாண்டவ நடனமாக்கினார்.

சொற்களின் ஒலி வடிவத்திற்கு உயிர் எழுத்துக்கள் எவ்வளவு வைக்கலாம் எனும் போது 12 என மாதங்களைக் கொண்டு, நிலவின் ஓட்டத்தைவைத்து முடிவு செய்தனர். ஏனெனில் பூமியில் உயிர் உருவாக மூல காரணம் நிலா என்பதைஅனைவரும் அறிந்து இருந்தனர். நிலாதான் பூமியில் நீர் உருவாக காரணம். நீர் தான் உயிர் உருவாக மூலம். நாதமும் விந்துவும் தான் உயிர் உற்பத்தியின் மூலம். நாதம் சிவத்திலிருந்து அண்ட மலர்விலிருந்து உருவாகி பூமியைஅடைந்தது. விந்து நிலாவின் ஈர்ப்பினால் பூமியில் உருவானது. எனவே நிலவின் ஓட்டத்தை உயிர் எழுத்தின் எண்களாக்கினர்.

நம் விஞ்ஞானிகளால் $H_2O$ என விதியை கண்டுபிடித்தவர்களால் ஒரு சொட்டு நீரை உருவாக்க முடியவில்லை. முடியவும் முடியாது. அதற்கு அவ்வளவு பெரிய நிலவு ஈர்ப்பு விசையுடன் இயங்கினால் தான் நீர் உருவாக முடியும்.

இப்படி உயிர் எழுத்து 12. எனில் மெய் எழுத்து 18 என ஏன் முடிவெடுத்தார்கள்?




நம் உடல் உருவாக மூலம் நம் சூரியன். அந்த சூரியனிலிருந்து வரும் வெப்ப சக்தி, ஒளி சக்தி தான் நமக்குத் தேவையான இறை கிடைக்க இறைவன் ஏற்படுத்திய ஏற்பாடு. இறைவன் என்பவன் இந்த மிக பிரமாண்டமான இயற்கை. கடவுளர்கள் அனைவரும் நாம் எந்த காலத்தில், எப்படிப்பட்ட வாழ்வியல் வாழ வேண்டுமென்று, நம்மோடு வாழ்ந்து வகுத்துக் கொடுத்தவர்கள்.

தெய்வங்கள் என்பவை 8 வகையான சக்திகள். நம் தமிழ் மரபில் 7 கன்னிமார்களும், காளி எனும் காளி அம்மனும் எட்டு வகையான சக்திகளின் வடிவங்கள் தான்.




**8வது சக்தி மையம்.**

காளி என்பவள் Antomic Energy எனும் அணு சக்தி சிவனுக்கு கட்டுப்படாதவள். ஊழியை உருவாக்குபவர்.

ஏழு கன்னிமார்கள்.


| | | |
|---|---|---|
| 1. Sound energy | ஒலி | ஆகாயம் தெய்வானை அம்மன்,, வெள்ளை, வியாழன் |
| 2. heat energy | வெப்பம் | வள்ளி அம்மன், சிவப்பு, செவ்வாய் |

| | | |
|---|---|---|
| 3. Light energy | ஒளி | காற்று, கனக லட்சுமி அம்மன் மஞ்சள், புதன் |
| 4. Hydro energy | நீர் | நீலாம்பிகை அம்மன், நீலம், நிலா |
| 5.. Kinetic energy | நிலம் | பச்சை அம்மன், மீனாட்சி அம்மன், இலட்சுமி, வெள்ளி |
| 6. masutic energy | காந்த சக்தி | வாலை அம்மன் மூலாதாரம் கருப்பு, சனி |
| 7. Electrical energy | மின்சக்தி | கங்கை அம்மன் நீர் வண்ணம் (colour less), சூரியன் |



மெய் எழுத்து 18 என்பது சூரியனின் ஓட்டம் தான். மெய் எழுத்து 18 க்கு உண்டான சூரியனின் ஓட்டத்தை 18 என்னும் எண்ணுக்கு எப்படி ஒப்பிட்டார்கள்.

நாம் தினமும் பார்க்கும் சூரியன் நம் தமிழ் மண்ணில் கிழக்கில் உதித்து மேற்கில் மறைகிறது.




ஒரு வருசத்தில் 24 திகிரி தெற்கிலும், 24 திகிரி வடக்கிலும் நகர்வதைநாம் ஒரு குச்சி நட்டு பார்த்தால் எளிதாக பரிந்து கொள்ளலாம்.

அதேபோல் நிலவின் ஓட்டம் பூமியிலிருந்து 5 திகிரி விலகி பூமி செல்லும் பாதையை வெட்டிக் கொண்டு செல்வதைவானில் அவதானிக்க முடியும். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க கூடாது என்பதை ஏன் என்று பார்த்தால், இந்த வான் பார்க்க ஏதுவான இடத்தில் கோயில் கட்டி தினமும் அதை அவதானித்து அந்தந்த ஊருக்கு தேவையான பஞ்சாங்கம் அந்தந்த ஊர்க்காரர்களே உருவாக்கிக் கொண்டார்கள்.


64 வகையான ஆயர் காலத்தில் (கிருஷ்ணன்) உருவான கலைகளை கோயில்களில் ஆயர்கால மண்டபங்களில் கற்றுத் தேர்ந்தார்கள். அந்த காலத்தில் கோயில்கள் பள்ளிகளாக இருந்தன. அப்படி நிலவின் ஓட்டத்தை அவதானித்ததன் விளைவாக சூரியனின் ஓட்டத்தையும் துள்ளியமாக கணித்தார்கள். நாம் பார்க்கும் சூரியனின் ஓட்டம் பூமியின் ஓட்டத்தைத்தான் காட்டுகிறது. சூரியனின் ஓட்டத்தை நாம் நிலவின் ஓட்டத்தில் தான் கணிக்க வேண்டும். 6 மாதங்களுக்கு ஒருமுறை நிகழும் சூரிய கிரகணம் எனும் நிகழ்வு சூரிய ஓட்டத்தினால் நடக்கும் நிகழ்வு என சங்கத்தில் கூடி விவாதித்து அறிந்து கொண்டனர் நம் முன்னோர்கள். எப்படி?

நிலாவை பூமியிலிருந்து பார்க்கும் பொழுது நிலா







வானில் விண்மீன்களின் பின் புலத்தில் ஒரு முழு வட்டம் வர 27 நாட்கள் ஆகிறது. இந்த 27 நாட்கள் தான் ஒரு திங்கள் என்கிறோம். இந்த 27 நாட்களுக்கும் பெண்களின் கருமுட்டைக்கும் சம்பந்தம் உண்டு. சூரியனை சுற்றி பூமி செல்லும் 24 திகிரி சாய்ந்த வட்டப்பாதையை நிலா பூமியை சுற்றி வரும் போது ஆரம்பித்த இடத்திலும், சுற்றி வந்து மீண்டும் வெட்டுவதில்லை.




ஒரு முறை சுற்றும் பொழுது 1.66 திகிரி பின்னால் நழுவுகிறது. இப்படி 30 திகிரியை கடக்க 18 மாதம் அதாவது (30÷1.66=18), 18 மாதத்தில் பின்நோக்கி நழுவி ஒரு ராசியை கடந்து விடுகிறது. அப்படி 12 ராசிகளையும் பின்னோக்கி சுற்றி வர 12 x 18 = 216 மாதம் = 18 வருசம் ஆகிறது. சூரியன் எதிர்ப்பக்கம் சுழல்வதால்



இந்த நிலாவின் ஓட்டத்தில் வெட்டுப்புள்ளி எதிர்ப்பக்கம் சுழன்று மீண்டும் ஆரம்ப இடத்திற்கு வர 18 வருசம் ஆகிறது. இதனால் இந்த 18 என்பதை நம் குழந்தைகளுக்கும் எளிதாக கடத்த 18 மெய் எழுத்துக்களாக்கினர். முருகன் காலத்தில் இதை அறிந்து இருந்தனர். ஆனால் அதற்கு இராகு என பெயர் வைக்கவில்லை. திருமால் காலத்தில் தான் பஞ்சாங்கம் உருவாக்கும் போது அந்த நிகழ்வுக்கு இராகு என பெயரிட்டனர்.

இப்படி சூரியன் ஓட்டத்தை கணக்கீடு செய்த பொழுது சூரியன் ஒரு பாதம் (3.33 திகிரி) நகர 247 சுழல் ஆண்டுகள் ஆகும். என முருகன் காலத்திலேயே கணித்திருக்கிறார்கள். எனவேதான் முருகன் எழுத்துக்கள் உருவாக்கிய பொழுது 247 எழுத்துக்களை உருவாக்கி இருக்கிறார். இந்த கணக்கு தெரியாமல் குமரி கண்டம் மூழ்கப் போகும் காலத்தை கணிக்க முடியாது. மூழ்கும் முன்னர் அனைவரையும் காவடியுடன் இலங்கை வரை நடந்து வான் பகைவெல்ல முடியாது.





விண்ணியலும் வாழ்வியலும்

# உயிர் எழுத்துக்கள்


**உயிர் எழுத்துக்கள் - 12**


உயிர் எழுத்துக்கள் என்பது கால அட்டவணை (periodic table) . காலத்துக்கும் உயிருக்கும் தொடர்பு உள்ளது. வேகம், தூரம், காலம் மூன்றும் ஒன்றுக் கொன்று பின்னிப் பினைந்து இருக்கும். வேகம் = தூரம் x  காலம். என ஒன்று மற்றொன்றை பிரிந்து இருக்காது.

கருத்தாக (information) இருந்த அண்டம் (Galaxy) மலர்ந்த தருணத்திலிருந்து (Big bang) காலம் ஆரம்பிக்கிறது என்பது நம்முடைய "அ" எனும் எழுத்தில் உள்ள சுழியத்தில் ஆரம்பிக்கிறது.


அந்த சுழியம் என்பது அண்ட வெடிப்பு நிகழ்ந்த இடம் (சிவம்). சுழியம் என்பது எதுவும் அற்றதல்ல. அதிலிருந்து தான் அனைத்தும் வந்திருக்கிறது. எனவேதான் அதால் வகுக்கும் பொழுது முடிவு விலி வரும். இந்த அண்டம் மலர்ந்த இடத்திலிருந்து (P r e s s u r e ) அழுத்தம் உருவாகி முதலில் கிளம்பியது சத்தம் தான். சத்தம் என்பது நாதம் (Frequency).

இந்த நாதம் என்பது தொடங்கிய தருணம் தான் காலம்





ஆரம்பம்.  நாதத்திலிருந்து பிறந்தது தான் வெளி (Space), வெப்பம் (heat) , காற்று (Air), ஒளி (Light) என்பன. அந்த வெளியில் இருந்து

கிளம்பிய முதல் தனிமம் Hydrogen நீரியம்.


இப்படி சுழியத்தில் ஆரம்பித்த காலம் பரந்து விரிந்து நான்கு கரங்களாக (Swasthik) பொன் விகிதத்தில் (Golden ratio) விரிகிறது. அந்த பொன் விகிதத்தில் தான் இந்த அண்டமும், இந்த உலகில் உள்ள உயிரினங்களின் செல்களின் பரிமானங்களும் உள்ளது.

"அ" பற்றி இந்த பொன் விகிதம் நமக்கு அறிவிக்கும். 1, 2, 3, 5, 8, 13, 21, .... அதாவது H+1 = 2 , 2 + 1 = 3 , 3 + 2 = 5 , 5 + 3 = 8 , 8 + 5 = 13 , 13 + 8 = 21 ... ... இப்படி விரிந்து கொண்டேஇருக்கும். இந்த கணக்குகள் அனைத்தும் நமக்கு ஏற்கனவே தெரியும் என்பது தான் இந்த "அ" எனும் எழுத்தின் சிறப்பு.

இப்படி பொன் விகிதத்தில் விரிந்த அண்டம், ஆரம்பத்தில் கடுமையான வெப்பமாக இருந்தது. அது படிப்படியாக குளிர்ந்து காற்றாக இருந்தது, அடுத்தடுத்த தனிமங்களாகி, தனிமங்கள் சேர்ந்து சேர்மங்கள் என உருண்டு திரண்டு சூரியன்களாகவும், கோளங்களாகவும், துணைகோளங்களாகவும் கோடிக்கணக்கில் உருவாகியது. நான்கு கரங்களிலும் இது போல் எண்ணற்ற சூரியன்களும், கோளங்களும் உருவாகின.

இந்த கோளங்களில் நிறை அதிகம் உள்ள உலோகங்கள்






நடுவில் சென்று, காய்ந்த உருண்டைகளாகியது. அந்த காய்ந்த உலோக உருண்டைகள் தான் காந்தங்களாக மாறியது. சூரியனிலும், அந்த காய்ந்த உலோக உருண்டைகள் இருக்கிறது.


நம் பூமி, நிலா போன்ற கோள்கள் கிழக்கு மேற்கில் சுழன்று கொண்டு இருப்பதால் மேல் புறம் குளிர்ந்து உள்ளிருக்கும் வெப்பம் வெளியே தீப்பிழம்பாக தெரியாமல் ஒளியை வெளிப்படுத்துவதில்லை. ஆனால் சூரியன்கள் மேற்கு கிழக்காக எதிர்புறத்தில் சுற்றுவதால் உள்ளிருக்கும் தீப்பிழம்புகள் வெளி கிளம்பி சுய ஒளி உள்ளவைகளாகவும், வெப்பம் தகிக்கக் கூடியவைகளாகவும் உள்ளது.



நிலாவும், பூமியும் கிழக்கு மேற்காக சுழன்று கொண்டு கிழக்கு மேற்காக சூரியனை சுற்றிக் கொண்டு உள்ளது.

ஆனால் சூரியன் மேற்கு கிழக்காக சுழன்று கொண்டு மேற்கு கிழக்காக சக்தி மையத்தை மையமாக கொண்டு சுற்றிக் கொண்டு உள்ளது. 8 வகையான சக்திகள் கண்ணுக்குத் தெரியாமல் அனைத்துப் பொருட்களையும் (சிவம்) இயக்கிக் கொண்டு உள்ளது. அண்ட மையத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய அனைத்தும் கண்ணுக்குத் தெரியக் கூடிய பொருட்களாக மாறி உருண்டு திரண்டு சூரியன்களாகவும், பூமிகளாகவும், நிலாக்களாகவும் மாறி என்று காந்தமாக







மாறியதோஅன்று வெளி வந்த இயக்கம் நின்று அந்த அண்ட மையத்தால் திரும்ப ஈர்க்க ஆரம்பித்த தருணம் வரை"அ" எனும் எழுத்தில் அடங்கி இருக்கிறது.


இந்த "அ" உருவான வரை நம்முடைய, நம்முடன் வாழ்ந்த சிவன் இருந்திருக்க வாய்ப்பு இல்லை. ஏன் என்றால் "அ" உருவான காலத்தில் இன்னும் உயிர்களே இல்லை. திருவள்ளுவர் சொன்னது போல "அ" முதல் ஔ வரை 247 எழுத்துக்களும் அந்த சிவனுக்கு முன்னரே இருக்கக் கூடிய அறிவியல் உண்மைகள் தான்.


**முதல் எழுத்து அ**

இன்னும் "அ" எனும் அண்ட மலர்வின் வடிவத்தில் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. அண்ட மலர்வின் நான்கு கரங்களில் நம் சூரியனும் பூமியும் ஒரு கரத்தில் தான் உள்ளது.


அதுவும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிய கரத்தில் தான் உள்ளது. மற்ற மூன்று கரங்களை அதனால் தான் தவிர்த்து ஒரு கரத்தை மட்டும் "அ" வடிவமாக்கினார்கள். அந்த கரம் முடியும் இடத்திலிருந்து ஒரு படுக்கை (horizontal) கோட்டை ஏன் போட்டார்கள். அதன் முனையில் ஒரு 90 திகிரி கோணத்தில் ஒரு குறுக்குக் கோடு. எவ்வளவு தூரம் விண்ணியலை சரியான கோணத்தில் புரிந்து கொண்டால் இவ்வளவு துல்லியமாக ஒரு "அ"







வடிவத்தைமுதல் எழுத்தாக வடிக்க முடியும்? . இதை ஏதோ போகிற போக்கில் கல்தச்சர்கள் எழுத்துக்களை வடிக்கும் போது வட்டமாக வட்டெழுத்துக்களாக , அடிக்க முடியாமல் மாற்றி, மாற்றி இந்த எழுத்து வந்ததாக நவீன அறிஞர்கள் கண்டுபிடித்து கூறுவதாக கூறுபவர்களை நினைத்தால் சிரிக்கத்தான் தோன்றுகிறது. இவ்வளவு அற்புதமாக கோணங்களை போகிற போக்கில் கூற முடியாது. குறைந்தது 2600 வருடங்கள் தொடர்ந்து அவதானித்தால் மட்டுமே இவ்வளவு துல்லியமான கணக்குகளுடன் "அ" வை உருவாக்க முடியும். சுழியத்திலிருந்து அந்த பொன் விகித விரிவு முடியும் இடம் தான் நம் சூரியனின் சக்தி மையம். அந்த சக்தி மையத்தின் மையத்தை சுற்றித்தான் நம் சூரியன் சுழன்று கொண்டே பின் நோக்கி வீடு பேறு அடைய சுழன்று கொண்டு பின் நோக்கி விரிந்து கொண்டு செல்கிறது.




நம் அண்டத்தில் உருவான சூரியன்கள் தன் குடும்பத்துடன் ஈர்ப்பு சக்தி அடைந்தவுடன் (magnetic field) திரும்ப ஒடுங்கிக் கொண்டு பின் நோக்கி விரைந்து கொண்டு உள்ளது. அந்த சக்தி மையத்தின் புள்ளியிலிருந்து நம் அண்ட மலர்வின் மையமான சிவத்தின் கோணம் 13.33 திகிரி. (13 திகிரி 20 minutes). நம் பூமியின் அச்சு, மற்றும் சூரியனின் அச்சுக்கும் உள்ள வேறுபாடு 24 திகிரி. சக்தி மையத்திற்கும் பூமியின் அச்சுக்கும் சக்திமையத்தின் அச்சுக்கும் வேறுபாடு 33.33 திகிரி.


இந்த கணக்குகளுடன் கூடிய கட்டுமானம் தான் நம் சிதம்பர ரகசிய கோயில். அதில் தெற்கு நோக்கிய கரத்தில் மட்டும் நடையை மறைத்து இருப்பார்கள்.



**சிதம்பரம் கோயில் Top view.**

நான்கு திசைகளின் கோபுரங்களும் ஒன்றுக்கொன்று நேராக இருக்காது விலகி இருக்கும். இது சுவஸ்திக் சின்னம் போல (Galaxy) அண்ட மலர்வைக் குறிக்கக் கூடியது. அண்டத்தின் மையத்தில் தான் நடராசர் சிலை இருக்கும்.


நிலா, பூமி, சூரியன், சக்தி மையம் கோண வேறுபாடே இந்த பொன்விகிதத்தின் சுற்றுக்கு அடிப்படை. பூமியின் மேலே 36000 உயரத்திற்கு ஒரு பாதுகாப்பு வளையம் இருக்கும். இந்த பாதுகாப்பு வளையத்தைத் தாண்டி எதுவும் உள்ளே வந்தாலும், எரிந்து சாம்பல் ஆகிவிடும். அதேபோல் பூமியிலிருந்து எந்த பொருளும் அந்த 36,000km ஐ-த்தாண்டி வெளியே போக முடியாது. அந்த பாதுகாப்பு வளையம் போல் எல்லா கோள்களுக்கும் இருக்கும். பாதுகாப்பு வளையத்தைத் தாண்டி வெட்ட வெளிதான். அந்த வெட்ட வெளியில் அனைத்தும் ஒரேவேகத்தில் தான்



பயணிக்கும். லேசான தூசியிருந்து, கணமான சூரியன் வரை அனைத்தும் ஒரே வேகத்தில் சிவத்தை நோக்கித் திரும்பிக் கொண்டு உள்ளது. அதனால் தான் வானில் தெரியும், நம் சூரிய குடும்பத்தின் கோள்களைத் தவிர அனைத்து விண்மீன்களும் நகராமல் இருப்பது போல் தெரிகிறது. உயிர் எழுத்தின் முதல் எழுத்தான "அ" விற்கே இவ்வளவு விளக்கம் குழந்தைகளுக்கு சொல்லி கொடுக்க வேண்டும்.

**அடுத்த எழுத்து ஆ.**

இந்த ஆ எனும் எழுத்தில் "அ" பின்னால் இருக்கும் சுழியம் , எப்பொழுது நம் சூரியனுக்கும், பூமிக்கும் நிலாவுக்கும் காந்தத் தன்மைஉருவானதோ? அந்த கணத்திலிருந்து , சிவத்திலிருந்து வெடித்து வெளியே சீறிப் பாய்ந்து விரிந்த பொருட்கள், மீண்டும் சிவத்தை நோக்கி நின்று மெதுவாக திரும்ப ஆரம்பித்து, மீண்டும், மெதுவாக அதன் சுற்று பெரிதாகிக் கொண்டேசிவத்தை நோக்கி ஈர்க்கப்படும். அதாவது சிவத்திலிருந்து விரிந்த கரம் சுருங்க ஆரம்பிக்கும். சூரியன்கள் நின்று திரும்பி சுழல ஆரம்பித்து சுருங்கும் கரத்தில் அதன் சுற்று மெதுவாக விரிந்து கொண்டு செல்லும். கரத்தின் கரம், எந்த அளவிற்கு சுருங்குகிறதோ, அந்த



அளவுக்கு சூரியன்களை இயக்கும் சக்தி மையங்களின் சுற்று விரியும். அதனால் நமக்கு நம் சூரியனின் வேகம் கூடவோ குறையவோ ஆகாது. நின்று திரும்பும் சூரியனை இயக்கும் சக்தி மையம் பொன்விகிதத்தில் சுழன்று கொண்டு பின் நோக்கி சிவத்தை நோக்கி விரியும். அனைத்து விண்மீன்களும் ஒரே வேகத்தில் வடக்கு நோக்கி, தென்புலமான சிவத்தை நோக்கி


ஈர்த்து கரம் சுருங்கிக் கொண்டு உள்ளது. கண்களுக்குத் தெரியும் அனைத்து சூரியன்களுக்கும், அல்லது சூரிய குடும்பங்களுககும் தனித் தனியே சக்தி மையங்கள் இருக்கும். சிவத்தின் கரம் சுருங்கும். ஆனால் சக்தி மையத்தின் கரம் விரியும். அதைத்தான் இந்த உயிர் எழுத்தின் இரண்டாம் எழுத்தான ஆ உணர்த்துகிறது.

நம் பூமி உலகம். நம் சூரியனைச் சேர்ந்த குடும்பம் அகிலம் எனப்படும். இப்படி கோடிக்கணக்கான சூரியன்கள சேர்ந்தது ஒரு Cluster ஆக சேர்ந்து இருக்கும். கார்த்திகை நட்சத்திரம் அப்படி ஒரு Cluster தான். இதை புவனம் என அழைப்போம். இப்படி புவனங்கள் சேர்ந்ததுதான் ஒரு கரம். நான்கு கரங்களைக் கொண்டது அண்டம். இப்படி பல அண்டங்களை உள் அடக்கியது பேரண்டம். பிரம்மாண்டம்.

இந்த ஆ எனும் உயிர் எழுத்தில் "அ" வின் அந்த செங்குத்தான கோட்டில் கீழே அடியில் சுழியம் ஆரம்பிக்காது. சற்று மேலே சுழியம் ஆரம்பிக்கும். சிவத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய கரத்தைப் போல சிறிய அளவான கரம் போன்று எதிர்த்திசையில் சக்தி மையம் சிவத்தின் கரத்தில் சிவத்தைநோக்கித் திரும்புவது போல வடிவமைக்கப்பட்டு இருக்கும். இப்படி நம் பிரபஞ்சத்தின் அசைவுகளைநம் உயிர் எழுத்துக்களை கால அட்டவணைப்படி நமக்கு நம் முன்னோர்கள் உருவாக்கி விட்டுச் சென்று உள்ளார்கள்.

**அடுத்த எழுத்து இ .**

நம் சூரியன் உருவாகித் திரும்பிய பொழுது, நம் சூரியனுடன் இரண்டு சூரியன்கள் சேர்ந்து மூன்று சூரியன்களாக ஒன்றைஒன்று ஈர்க்காமல் விலக்கிக் கொண்டு ஒரு சக்தி மையத்தைமையமாக்கி சுழன்று கொண்டு செல்வதைத்தான் இந்த இ எனும் எழுத்து நமக்கு உணர்த்துகிறது. பொதுவாக வானில் தெரியும் விண்மீன்களை Telescope மூலம் பார்த்து zoom செய்து கொண்டு சென்றால் சில விண்மீன்கள் இரண்டாக பிரியும், சில விண்மீன்கள், மூன்றாக பிரியும் அதை Single star, bi Star, Try star என பிரிப்பார்கள். இதில் நமது சூரிய மண்டலம் Tristar எனப்படும் வகையைச் சார்ந்தது. இரண்டு இணைசூரியன்களைத் தான் நாம் நமது கோயில்களில் பைரவர்களாக வழிபடுகிறோம்.




இந்த இரண்டு இணைசூரியன்களும் நம் கிழக்குத் தொடுவானில் அந்த ஆதி ஓரையான மூன்று உலக்கை விண்மீன்களுக்குக் கீழே Procyon, Sirius என (சின்ன பைரவர், பெரிய பைரவர்) பிரகாசமாக மினுக்கிக் கொண்டு இருப்பதைப் பார்க்கலாம். சிவத்தின் சுழியத்தில் இருந்து பொன்விகிதமான கரத்தில் சக்தி மையத்தைச் சுற்றி படத்தில் காட்டி உள்ளது போல் பொன் விகிதமாக விரிந்து சக்திமையத்தை மையமாக்கி மூன்று சூரியன்களாக சுழன்று திரும்பிக் கொண்டு செல்வதைத்தான் இந்த இ அணுக்கோட்பாடு போல வடிவமைக்கப்பட்டு உள்ளது.

மூன்று சூரியன்களின் வட புலமான அச்சு ஒரேமாதிரி தென்புலமான சிவத்தைநோக்கி ஈர்க்கப் படுகிறது. அதனால் மூன்று சூரியன்களின் காந்த புலம் வடக்கு, வடக்கு என இருப்பதால் ஒன்றைஒன்று ஈர்க்காமல் விலக்கிக் கொண்டு பின்நோக்கி சிவத்தை நோக்கி ஈர்த்து சுழன்று கொண்டு செல்கிறது.

இந்த "அ, ஆ, இ" போன்றவைகளை நாம் வானத்தில் பார்க்க முடியும். அந்த மூன்று உலக்கை மீன்களின் தெற்கே 5 திகிரியில் அந்த சிவமாகிய நம் Galaxy-ன் மையம் சாதரணமாக நம் கண்ணுக்குத் தெரியும். அந்த சிவத்தைக் காட்டித் தான் அது நம்






அண்ட வெடிப்பு நிகழ்ந்த இடம் என சுட்டிக்காட்டியதால் அவர் சிவன் என அழைக்கப்படுகிறார். "அ" வில் விரியும் கரம் இருட்டான அமாவாசைகளில் 66 திகிரி சாய்வில் அந்த ஆதி ஓரையிலிருந்து விரிச்சிகம், தனுசு ராசிக்கிடையில் மூல நட்சத்திரத்தின் வழியேஒரு பால்வெளி வட்டமாக தெரியும். அது 10 திகிரி அகலத்திற்கு ஒரு வட்டமாக மேக கூட்டமாக தெரியும். அதில் கலர் கலரான அண்ட வெடிப்புகளின் சாகசங்களைக் காணலாம். நாம் ஒரு கரத்தில் பூமியிலிருந்து பார்ப்பதால் நான்கு கரங்களுமே வட்டமாகத்தான் தெரியும். நமது பக்கத்துக்கரமான கரம் அருகே தெரிவதால் மூல நட்சத்திரத்தின் அருகே சற்று பிரகாசமாகத் தெரியும். நம் அண்டம் எப்படி இருக்கும் என்பதை நமது பக்கத்து அண்டமான அண்டை அண்டம் (Andromeda) பார்த்துத்தான் தெரிந்து கொண்டார்கள். எந்த சக்திகளையும் நாம் கண்ணால் பார்க்க முடியாது. எனவே கண்ணுக்குத் தெரியாத சக்திமையத்தை மூன்று சூரியன்கள் சுற்றி வருவது போல் வடிவமைத்து இருக்கிறார்கள்.

**எப்படி அண்டை அண்டத்தைப் பார்த்தார்கள் ?**

முருகன் காலத்திலேயே கண்ணாடி கண்டுபிடித்து விட்டார்கள். அவருடைய பெயர்களில் ஒன்று குப்புசாமி. கண்ணாடி செய்தவர்களுக்கு பெரிய குவி ஆடி குழி ஆடி செய்வது ஒன்றும் பெரிதல்ல. அதில் தெரிந்த பிம்பத்தில் Andromeda Galaxy- ஐ பார்ப்பது ஒன்றும் பிரமாதமல்ல. இரண்டாம் தமிழ்ச் சங்கம் ஆரம்பித்த பொழுது பொதுவான கலந்துரையாடல்கள் மற்றும் ஆராய்ந்த ஆதாரங்களை பொது மக்களுக்கு தெரியபடுத்த ஒரு பொதுவான இடம் இருந்தது. அதுதான் கபாடபுரம். ஆனால் சித்தர்கள் தங்களுடைய



கருத்துக்களை ஆராய்ந்து பார்க்க ஒரு Research Centre வைத்து இருந்தார்கள். அது பொதிகை மலை. அங்கு சித்தர்கள் கூடி தாங்கள் உள் உணர்வில் உணர்ந்ததை சரிபார்த்து தரவுகள் சேகரித்த பின்னர் தான் கபாடபுரத்தில் பொது வெளியில் விளக்கி, அனைவருக்கும் கொண்டு சேர்ப்பார்கள். முருகன் காலத்தில் பொதிகைமலைக்கு ஆசானாக இருந்தவர் தான் அகத்தியர்.

குமரிக்கண்டம் மூழ்கிய பின் 6480 ஆண்டுகள் வரை அமைதியாக இருந்த கடல் 6480 ஆண்டுகளுக்கு முன்னர் மீண்டும் வடக்கிலிருந்த கடல்களிலிருந்து நீர் வடிந்து நம் பூம்புகாராக இருந்த துறைமுகம் கடலில் மறைந்து சென்னை வரை கடல் மேலேறியது. அதேபோல் இப்பொழுது தென் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே நிலங்கள் தான் இருந்தது. அதுவும் கடலில் மூழ்கி தற்போது உள்ள வடிவத்தில் மாறி இருக்கிறது. அந்த தருணத்தில் தான் வடக்கே செங்கடலும், மத்திய தரைக்கடலும் இணைந்து இருந்தது பிரிந்தது, துருக்கி மற்றும், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளும் மூழ்கி இருந்தது, அந்த இடத்தில் மெதுவாக நீர் வடிந்து நிலங்களாக மாறியது. தீவுகளாக இருந்த பாகிஸ்தான் (ஹரப்பா, மொகஞ்சதாரா) பெரும் நிலப்பரப்பாக மாறியது.



**ஹரப்பா**




**மொகஞ்சதாரா**

அந்த இரண்டாம் நீரூழியில் தான் மீண்டும் கடல் வடக்கிலிருந்து

தெற்கே வடிந்த போது அந்த தமிழர்கள் வாழ்ந்த ஹரப்பா, மொஹஞ்சதாரா போன்ற நகரங்கள் மூழ்கி பின் தெளிந்தது. அது ஹரப்பா இல்லை, ஆறப்பா, அது மொஹஞ்சதாரா இல்லை அமைஞ்ச தரை. முதல் ஊழியில் முருகன் காலத்தில் காவடியுடன் இலங்கையில் தண்டு ஊன்றி 60 ஆண்டுகள் கழித்து ஆறுமுகனின் நினைவுடன் குடி அமர்ந்த ஊர் தான் ஆறப்பா (ஹரப்பா). இலங்கையில் இருந்து கிழக்கில் கடலில் பயணித்து இன்று உள்ள அமெரிக்காவில் குடி அமர்ந்தவர்கள் தான் செவ்விந்தியர்கள் எனும் மாயன்கள். அவர்கள் தான் Cowboys எனப்படும் mexico காரர்கள்.

இரண்டாம் ஊழியில் கபாடபுரம் மூழ்கிய போது, தமிழ் சங்கத்தை மதுரைக்கு மாற்றினார்கள். Research centre - ஆக பொதிகைமலையே நீடித்தது.

[redacted]






[redacted]

இரண்டாம் ஊழிக்குப் பிறகு 1480 ஆண்டுகள் கழித்துத்தான் மகாபாரதப் போர் நடந்தது. அந்த காலத்தில் தான் கருத்தினன் (கருப்பண்ணன்) எனும் கிருட்டிணன் திரு வில்லிப்புத்தூரில் ஆண்டவராக இருந்தார். கருத்தினனும், 100 மல நாட்டைச் சேர்ந்த துரியோதனன்களும், பொதிகைமலையில் தான் கல்வி பயின்றனர். கிருட்டிணன் காலத்தில் தான், இரண்டாம் ஊழிக்குப் பின்னர் 400 ஆண்டுகள் இயங்காமல் இருந்த இரண்டாம் தமிழ்ச்சங்கம் ஆயர் குலத் தலைவரான கிருட்டினனால் மதுரையில் புணரமைக்கப்பட்டது. ஆயர் கால மண்டபங்கள் அமைக்கப்பட்டது. 64 ஆயர் கால கலைகள் உருவாக்கப்பட்டது. அப்பொழுது நடந்த மகாபாரதப் போரில் தான் பொதிகைமலை சகுனியாலும், துரியோதனன்களாலும்

அழிக்கப்பட்டது. மகாபாரத போரில் தோற்ற குறவர்கள் (துரியோதணர்கள்) மற்றும், சகுனி குழுவினர்களும் அரேபிய பாலைவனங்களுக்கு கிருட்டினனால் துரத்தி அடித்து விட்டு, அவர் கொல்லம் துறைமுகத்தை குருவாயூரில் இருந்து ஆண்டு வந்தார். சபரிமலையில் பொதிகைமலைக்குப் பதிலாக ஆசான் பள்ளி ஆரம்பித்து குழந்தைகளை18 ஆண்டுகள் கல்வி கற்று 18 படிகளை கடந்து மக்களுக்குத் தொண்டாற்ற Research Centre உருவாக்கப்பட்டது.

அதில் தான் 7 வயதில் சேர்க்கப்படும் குழந்தைகள் கருப்பு வேட்டி அணிந்து உள்ளே வருவார்கள். அவர்கள் கன்னிசாமி என அழைக்கப்பட்டார்கள். ஒரு பருவம் மூன்று ஆண்டுகள். முதல் மூன்று ஆண்டுகள் கழித்து நீல வண்ணத்தில் உடைஉடுத்தி அடுத்த பருவ கல்வி கற்பார்கள்.





மூன்றாவது பருவமாக பச்சை உடை அணிவார்கள், நான்காம் பருவமாக சிவப்பு உடை அணிவார்கள், ஐந்தாம் பருவமாக மஞ்சள் ஆடை அணிவார்கள், ஆறாம் பருவத்தில் வெள்ளை ஆடை அணிந்து 18 படிகளைக் கடந்து வெளி உலகினரோடு தொடர்பு கொள்ள வெளி வருவரர்கள். ஆறாம் பருவத்தில் தான் அவர்கள் 64 கலைகளில் தங்களுக்குப் பிடித்த கலையை பயின்று அதில் தேர்ந்தவர்களாக (specialist) வெளிவருவார்கள். இப்படி அவர் கொல்லம் கடற்கரையை பாதுகாத்து குருவாயூரில் ஆட்சி பொறுப்பில் இருந்தார். அவர் அப்பொழுது, இனிமேல் வரும் காலம் பாலை தினையில் இருந்து தான் ஆட்சியாளர்கள் அதிகாரத்தில் வருவார்கள் என உணர்ந்து, தான் இறந்த நாளிலிருந்து 5000 ஆண்டுகள் கலிகாலமாக

இருக்கும் என அறிவித்தார். இந்த கலிகாலத்தையும் இன்பமாக எப்படி கழிப்பது என பல வழிமுறைகளை சொல்லித்தந்து விட்டுச் சென்றார். அப்படித்தான் எளிமையாக, இந்த 5000 வருட கலிகாலத்தை நாம் கடந்து விட்டோம். இப்பொழுது 5126 ஆண்டுகள் ஆகிவிட்டது, கிருட்டிணன் இறந்ததிலிருந்து இதைத்தான் நாம் கலி ஆண்டாக நாம் வழிவழியாக கடத்தி இருக்கிறோம்.

கிருட்டிணனின் நினைவாகத்தான் பஞ்சாங்கத்தில் மகர வடிவம் உருவாக்கப்பட்டது. மகர வடிவம் என்பது காளையின் தலையுடன் மீன் வடிவமாக வடிவமைக்கப்பட்டு இருக்கும். அவர் ஆயராக திருவில்லிப்புத்தூரில் இருந்து குருவாயூருக்கு சென்று கடலை கண்காணித்ததால் மீன் வடிவம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர் காலத்தில் குமரிக் கண்டம் மூழ்கியது, மீண்டும் இரண்டாம் ஊழியில் பூம்புகார் கடலில் மறைந்தது என இரண்டு




கடல் கோல்களை அனைவரும் தெளிவாக அறிந்து இருந்தனர். பூமியிலும், வானிலும் நடந்த மாற்றங்களை அவதானித்து இருந்தனர். எனவே அடுத்த ஊழி எப்பொழுது நடக்கும் என தெரிந்து கொள்ள, கிருட்டினன், தலைமையில், பூமியின் நில நடுக்கோட்டிலிருந்து வடக்கே 30 திகிரியில் உள்ள நிலவின் பயணம் வந்து திரும்பும் எகிப்தில் உள்ள Giza - வைத் தேர்ந்தெடுத்து அங்கே வானத்தை கவனித்து சூரிய ஓட்டத்தை அவதானித்தார்கள்.








அங்கு தொடர்ந்து, 2666.66 ஆண்டுகள் எடுத்த தரவுகளின் அடிப்படையில் தான் திருக்குறள் திருவள்ளுவரால் மூன்று பால்கள் 13 இயல்கள் 133 அதிகாரங்களுடன், 1330 குறள்களை உருவாக்கினார். ஆனால் அதற்கு முன்பே திருமாலால் 3600 ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சாங்கம் உருவாக்கப்பட்டு, நம் முருகனால் உருவாக்கப்பட்ட தமிழி எழுத்துக்களை இப்பொழுது உள்ள தமிழ் எழுத்துக்களின் வடிவங்களாக மாற்றி அமைக்கப்பட்டது.

கிருட்டிணன் காலத்துக்குப் பின் தடுமாறிய இரண்டாம் தமிழ்ச்சங்கம் தளர்ந்து திருமால் காலத்தில், மூன்றாம் தமிழ்ச் சங்கமாக மதுரையில் மீண்டும் தழைத்தது. அவர் காலத்தில் தான். தஞ்சாவூர், கும்பகோணத்தில் உள்ள வீரநாராயண ஏரியும்,



கல்லனையும் கட்டப்பட்டது. கரிகாலன் என்பது திருமாலின் மற்ற பெயர்களில் ஒன்று. கரி என்றால் கருப்பு (மால்) , காலன் என்றால் பஞ்சாங்கம் எனும் காலத்தை கணிக்கும் கணக்குகளை கொடுத்ததனால் கரிகாலன் எனப்பட்டார்.

**கல்லனை.**



**வீர நாராயண ஏரி.**



இப்படி நம் வரலாறு நமக்கே திகைப்பளித்து சிலிர்க்க வைக்கக் கூடியது. நாம் 13 தலைமுறைகளாக 420 வருசங்களாக நம் வரலாற்றை, மறைத்ததால் மறந்து விட்டோம். தவறில்லை.

**இ எனும் எழுத்து:**


திருமாலால் உருவாக்கப்பட்ட இ எனும் எழுத்தில் உள்ள ஐந்து பொருட்களை, இன்றும் நம் நவீன விஞ்ஞானிகள் Electron, proton, neutron என மூன்று பொருட்களை வைத்துக் கொண்டு அந்த கடவுள் துகளைத் தேடிக் கொண்டு உள்ளார்கள். ஆனால் நம் முன்னோர்கள் மெய் இயலின் துணைகொண்டு அணுவில் ஐந்து பொருட்களை அன்றே 'இ' ல் வடித்து இருக்கிறார்கள். அண்ட வெடிப்பு (மலர்வு) நடந்த இடம், மூன்று சூரியன்கள், இவற்றை இயக்கும் சக்திமையம், என ஐந்து பொருட்கள் 'இ' யில் நகர்கிறது.



அண்ட மலர்வு நடந்த இடம் "அ" எனும் சிவமாகவும், சக்திமையம் 'உ' எனும் சக்தியாகவும், 'ம்' எனும் நாதமாகவும், 'ஓம்' எனும் ஓங்காரத்தை 'இ' யில் வடிவமைத்து உள்ளார்கள். 'ம்' எனும் நாதம் தான் ஐந்து பூதங்களாக விரிந்து உள்ளது. விந்து நாதம் சேர்ந்த வடிவம் தான் 'உ'.

**அடுத்த எழுத்து "ஈ"**

'ஈ' எனும் எழுத்தில் இரண்டு உருண்டைகள் இணையாமல் இடையில் தடுப்பு உள்ளது போல வடிவமைக்கப்பட்டு இருக்கும். அந்த தடுப்பு என்பது ஈர்ப்பு எனும் Magnetic energy - ஐ குறிப்பதாக வடிவமைக்கப் பட்டு வடக்கு நோக்கி நகர்வதாகத் தான் மூக்கு வடிவமைக்கப்பட்டு உள்ளது. தமிழில் கால் என்பது நகர கூடியது. அல்லது காற்று என்பது பொருளில் தான் வடிக்கப்பட்டுள்ளது. நகர்ந்து கொண்டு இருக்கும் பூமியிலிருந்து பார்க்கும் போது பூமியின் ஈர்ப்பில் உள்ள நிலவை கால்களுக்கு இடையேயும், கால் குறியீடு என்பது பூமியையும், கால்களுக்கு வெளியே உள்ள




வட்டம் சூரியனைத் குறிக்கும். உண்மையில் நிலவின் விட்டம் 3,825 km, சூரியனின் விட்டம் 13,75,796 km. ஆனால் வானில் பார்க்கும் பொழுது இரண்டும் ஒரே அளவான வட்டமாகத் தெரியும். சூரிய கிரகணத்தின் போது நிலவின் வட்டம் சூரியனின் அளவுக்கு சரியாக பொருந்தி மறைக்கும்.



**சூரிய கிரகணம்.**

இதைத்தான் 'ஈ' வடிவத்தில் உள்ள இரண்டு வட்டங்களும் ஒரே அளவில் வடித்து உள்ளார்கள். சூரியன், பூமி, நிலா மூன்றும் ஒன்றை ஒன்று ஈர்த்துக் கொண்டு வானில் சுழன்று கொண்டு இருப்பது போல் தான் அதைவடித்து உள்ளார்கள். நிலா சிறியதாக இருந்தாலும் பூமிக்கு அருகில் இருப்பதால் பெரியதாக தெரிகிறது. சூரியன் தூரத்தில் இருப்பதால் அது சிறியதாக தெரிகிறது. நிலவின் விட்டம் 3825 km. இதிலிருந்து நிலாவுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் கணக்கிட முடியும். 3,825 x 108 = 4, 13, 100 km. அதேபோல் சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரத்தையும் நாம் கணக்கிட முடியும். சூரியனின் விட்டம் X 108 கணக்கிட்டால் அதுதான் சூரியனுக்கும் பூமிக்கும் இடையேஉள்ள தூரம் . 13, 75, 796 X 108 = 14,85,85,968 km. இதையெல்லாம் நமக்கு 3600 ஆண்டுகளுக்கு முன்பேசொல்லிக் கொடுத்தவர் உலகளந்த பெரும் ஆள் தான். பூமி, நிலா, சூரியன் மூன்றும் இந்த தூரங்களில் அமைந்துள்ளதால் தான் நம் பூமியில் உயிரினங்கள் உள்ளது. பூமியில் நாம் எங்கு நின்று கொண்டு இருந்தாலும் நம்மைச் சுற்றி ஒரு வட்டம் இருக்கும். அந்த வட்டம் ஒரு திகிரி வட்டம் என்பதைகண்டுபிடித்து அறிவித்தவர்.தான் திருமால் (பெரும் ஆள்) . அந்த ஒரு திகிரி வட்டத்தின் விட்டம் 111.111, K m என

கண்டுபிடித்ததால் தான் அவருக்கு நாமம் போடபட்டது. இந்த 111.111 ஐ வைத்து பூமியின் சுற்றளவு கண்டு பிடிக்க முடியும். 111.111 km x 360 = 40,000 KM இந்த 111.111 ஐ வைத்து மூன்று உலகினையும் அளந்து சொன்னவர் திருமால்.






இந்த ஈ -ல் இவ்வளவு தகவல்கள் உள்ளது.

**அடுத்த எழுத்து "உ"**

அண்டம் மலர்ந்த போது (பெருவெடிப்பு, Big Bang) முதலில் நாதம் (சத்தம்) தான் தோன்றியது. மற்ற தனிமங்கள் அனைத்தும் பெரும் அழுத்தத்தால் (pressure) வெடித்த சத்தத்தால் , வெளி (Space) உருவாகி அனைத்தும் வெளியில் பரந்து விரிந்து அ வடிவில் பயணம் செய்து உருண்டு திரண்டு சூரியன்களாகவும், கோள்களாகவும், உருவெடுத்து காந்தப்புலம் பெற்று திரும்பி சுழன்று கொண்டு வரும் பொழுது தான் அந்த நாதம் மெதுவாக வந்து கொண்டு இருந்தது. ஏன் என்றால் ஒலியின் (Sound) வேகம் 333.33 meter / Sec.. ஆனால் ஒளியின் வேகம் 3 லட்சம் km / sec. எனவேநாதம் வந்து சேர்வதற்குள், நமது 3 இனைசூரியன்கள் உருவாகி, நமது பூமி மற்றும் நிலா உருவாகி, விந்து உருவாகி நாதத்திற்கு காத்திருந்த பொழுது அந்த நாதம் வந்து சேர்ந்த அந்த தருணத்தில் இருந்து இந்த உலகில் உயிர் தோன்றியது.

உ எனும் வடிவத்தில் மேலேஇருக்கும் உருண்டைதான் நாதம் , கீழேஇருக்கும் கோடு விந்து. விந்து என்பது நீரால் ஆனது. நமது பூமியில் தான் நிலா சரியான தூரத்தில் இருப்பதால் நீர் உருவாகி இருக்கிறது. ஆனால் நிலாவில் நீர் இல்லை. (இருக்காது)

பூமியில் நீர் இருப்பதால் தான் விந்து உருவாகி நாதத்துடன் கலந்து உயிர் உற்பத்தி ஆகி உயிர்ப்போடு இருக்கிறது.



இந்த உயிர் தோன்றிய (period) தருணம் தான் நம்முடைய தமிழ் மரபில் காலம் ஆரம்பித்தாக எந்த ஒரு ஆரம்பத்திலும் உ எனும் வடிவத்தைபிள்ளையார் சுழியாக போடுவோம்.

ஒரு உயிரணு (செல், Cell) உயிரிகள் கடல்களிலும், மற்றும் நீர் ஆதாரங்களில் தோன்றி சூரியனின் கதிர்களில் இருந்து பச்சையம் தயாரித்து பெருக்கமடைந்து உயிர்களை உலகில் தக்க வைத்துக் கொண்டது. பூமியில் உயிர்கள் தழைத்து வளர்ந்தது. பின் உயிரினங்கள் தனிமங்களையும், (elements) தனிமங்கள் சேர்ந்து சேர்மங்களையும் (compound) உருவாக்கி பல்வேறு உடல்களாக உருப்பெற்று பரிணாம வளர்ச்சி அடைந்து கொண்டே இருந்தது. உப்புசத்தால் உயிர்கள் உற்பத்தி ஆக ஆரம்பித்தது. பின் மண்ணில் உள்ள சத்துக்களை எடுத்து செடி, கொடிகளாக தழைத்தன.

தொடு உணர்வு கொண்ட தாவரங்களாகவும், புல், பூண்டுகளாகவும் வளர்ந்தது. இவை விதைகளைஉருவாக்கி பல்கி பெருகியது. ஒரு உயிரணு என்பது பல்வேறு அணுக்களின் (Atom) கூட்டமைப்பு. மண் என்பது வேறு, நிலம் என்பது வேறு. மண் என்பது மரம், இலை, செடி, கொடிகள், பழ பூச்சிகள் மக்கி உரமானது. அதாவது சூரிய ஒளியை கொண்டு உருவான பொருட்கள் மண்.



ஏற்கனவே பூமியில் இருந்தது நிலம்.

இந்த நிலம் உயிர்களுக்கு ஆதாரம் மட்டுமே. உயிர்களுக்கு உண்டான சத்துக்கள் இந்த மண்ணில் இருந்து மட்டுமே கிடைக்கும். மண்ணில் இருந்து நேரடியாக நீரையும், நீரில் கரைந்த மண் சத்துக்களையும் எடுத்து வளர்ந்து நகராமல் நின்ற உயிரினங்கள் பின் மெல்ல மண்ணீரல் எனும் உறுப்பை உருவாக்கி சாப்பிடும் உணவுகளில் இருந்து சத்துக்களைப் பெற்று நிலத்திலிருந்து விடுபட்டு நெளியும் புழுக்களாக அடுத்த காலத்திற்கு (period) சென்றது தான்.



**அடுத்த எழுத்தான "ஊ"**

உ எனும் எழுத்தின் மேல் உள்ள வடிவத்திற்குப் பெயர் கொம்புக்கால் என்பதாகும். அந்த கொம்புக்கால் என்பது சித்தம்.. நிலத்திலிருந்து விடுபட்டால் மண்ணீரல் கொண்ட தொடு உணர்வு கொண்ட புழுக்கள். அடுத்த கட்டமாக நெம்பி, கால்கள் வளர்ந்து நகர ஆரம்பித்தது. அந்த உள் உறுப்பான மண்ணீரல் சித்தத்தால் இயங்கக் கூடியது. பிரபஞ்சத்தில் இருக்கும் ஆற்றலில் இயங்குவது தான் உள் உறுப்புகள். சித்தம் என்பது தானேஇயங்கக் கூடிய அறிவாக இறைவனால் படைக்கப்பட்டது. அது மனிதனால் இயங்கக் கூடியதல்ல. சித்தத்தை உணர்ந்தவர்கள் தான் சித்தர்கள். ஒரே இடத்தில் உள்ள உணவுகள் அல்லாமல் நகர்ந்து உணவுகளைத் தேட ஆரம்பித்தது. உயிர்கள் ஊர்வனவாக



பரிணமித்தது.

இந்த உயிரனங்களுக்கு சாப்பிட வாய் இருக்கும் நாக்கு இருக்காது. மண்புழுக்கள் இவ்வகையைச் சார்ந்தவைதான். உலகில் உள்ள உயிரினங்களில் ஐந்து வகையான புலன்கள் இருக்கின்றன. அவை, தொடு உணர்வு, சுவைத்தல், முகர்ந்து பார்த்தல், பார்த்தல், கேட்டல். இந்த புலன்களை(Sense) அறிய கூடிய கருவிகள் (பொறிகள்) ஐந்து . அவைதோல் (தொடு உணர்வு) , நாக்கு (சுவை) , மூக்கு (முகர்ந்து பார்த்தல்) , கண் (பார்த்தல்) காது (கேட்டல்) . இந்த ஐந்து கருவிகளும் இயங்கத்தான் ஐந்து ராச உறுப்புகள் உள்ளது. கொடு உணர்வை உணர்ந்து கொள்ள தோல். தோல் நன்றாக இருக்க வேண்டிய சத்துக்களை மண்ணீரல் மண்ணிலிருந்து பிரித்து தோலுக்கும் கொடுக்கும். புழுக்களில் நகரக் கூடியவைக்கு நாக்கு இருந்தால் அந்த உயிரிக்கு கண்டிப்பாக இருதயம் இருக்கும். நாக்கு நன்கு சுவைக்கும் தகுதியுடன் இருக்க கட்டாயமாக இருதயம் இருக்கும்.

இருதயம் இருக்கும் உயிரினங்களுக்கு கண்டிப்பாக அதை பாதுகாப்பாக இருக்க ஒரு உறுதியான கூடு வேண்டும். எனவே தான்

தாய் கருப்பையினுள் தங்கிய உயிர்களை
ஆய்வுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி ! ...என்றும்

முட்டைவாய்ப் பயிலும் முழு உயிர்த் திரள்களை
ஆட்டமேகாத்தருள் அருட்பெருஞ்ஜோதி ! ...என்றும்

நிலம் பெரும் உயிர் வகைநீள் குழு அனைத்தும்
அலம் பெறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி ! ...என்றும்.

வேர்வுற உதித்த மிகும் உயிர்த் திரள்களை
ஆர்வுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி !

என்றும் நான்கு வகையான யோனி வழிகளில் உயிர்களை இறைவன் படைத்து உள்ளார். அந்த இறைவன்தான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்னும் அருள் பேரொளியாகும்.

**அடுத்த எழுத்து "எ"**

உறுதியான கூடு வேண்டும் என்றால் Calcium- மால் ஆன எலும்புகள் உருவாக்கப்பட்டு உள் உறுப்புகள் பாதுகாப்பாக இருக்க வடிவைப்பு நடக்கிறது. ஊர்வனவாக புழுக்களாக இருந்த உயிரினங்கள் சுவையை அறியக்கூடிய இருதயத்துடன், இருதயம் பாதுகாப்பாக இருக்க உறுதியான கூட்டுடன் உயிரினங்கள் படைக்கப்பட்டது.

நாக்கின் சுவையால் தான் சாப்பிடும் பொருட்கள் நல்லதா? கெட்டதா? என சுவைத்துப் பார்த்து, கெட்டது என்றால் ஒதுக்கி விட்டு நல்லதை மட்டும் உணவாக எடுத்துக் கொள்ளும் திறன் பெற்றன உயிரினங்கள். தாவரங்களிலும் இந்த உறுதித்தன்மை கிடைத்தவுடன் தான், செடி, கொடி, புல் பூண்டுகளாக இருந்தவைகள் மரங்களாக பரிணமித்து ஓங்கி வளர்ந்து பூவுலகை பசுமையாக மாற்றியது. மரங்களுக்குத் தொடு உணர்வு மட்டும் என்பதாலும், அவை நேரடியாக மண்ணிலிருந்து சத்துக்களை எடுத்துக் கொள்வதால் அவைகளுக்கு மண்ணீரல் இல்லை. எலும்புகள் படைக்கப்பட்டதால் அவற்றின் மச்சைகளில் இரத்தம் உருவாக்கப்பட்டு அவை அனைத்து உறுப்புகளுக்கும் அனுப்பட்டது.. இருதயம் இருக்கும் உயிரினங்களுக்குத் தான் இரத்தம் சிவப்பாக இருக்கும்.

அடுத்து நாக்கில் சுவைத்து உணவு நல்லதா கெட்டதா என அறிந்து கொள்ளும் நேரத்தில் சில உணவுகள் உயிரினங்களுக்கு உடனே தீமையை ஏற்படுத்தியதால், அது நாக்கில் படாமலே நல்ல உணவா? கெட்ட உணவா? என அறிந்து கொள்ள முகர்ந்து அறியும் உணர்வுடன் கூடிய உயிரினங்கள் படைக்கப்பட்டது. அதற்கு மூக்கு தேவை. மூக்கு இருக்கும் உயிரினங்கள் மண்ணுக்கு அடியில் சென்று வாழ முடியாது. காற்றை இழுத்து அதில் வரும் வாடையை வைத்து அந்த உணவு நல்லதா? கெட்டதா என அறியும் ஆற்றல் பெற்றன. எனவே மூச்சு விட நுரையீரல் படைக்கப்பட்டது. உள்ளே செல்லும் காற்றில் பிராணவாயுவை பிரித்து ரத்தத்தில் கொடுப்பதும் ,

அனைத்து உயிரணுக்களுக்கும் பிராணவாயுவை கொடுத்து எரித்து சக்தியாக்கி பிரிந்த அபான வாயுவை ரத்தத்தின்



மூலமாக மீண்டும் நுரையீரலுக்கு வந்து மூக்கின் வழியே வெளியேற்ற உறுப்புகள் படைக்கப்பட்டது. இப்படி ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண சிக்கலான உறுப்புகள் படைக்கப்பட்டு உயிரினங்கள் மேலும் சிக்கலுக்கு ஆளானது.

முகர்ந்து பார்த்து உணவுகளை தொடாமலே நாக்கில் சுவைக்காமலே நல்லதா? கெட்டதா? என அறிந்த உயிரினங்கள் கண்களால் பார்த்து அதை ரசித்து, புசித்து சாப்பிட ஆசைப்பட்டதால் கண்கள் படைக்கப்பட்டது. கண்கள் பார்க்க வேண்டும் என்றால் கல்லீரல் உறுப்பு தேவை. எலும்பு மச்சைகளால் உருவாக்கப்பட்ட ரத்தம் இன்னும் நன்கு சுத்தம் செய்து கண்கள் பார்க்கும் திறனை பெற்றது. உறுதியான எலும்புகள் படைக்கப்பட்டு ஊர்ந்து கொண்டு இருந்த உயிரினங்கள், எழுந்து நடமாட கால்கள் படைக்கப்பட்டது.

**அந்த எழுத்துதான் "ஏ"**

இப்படி எலும்புகள் உருவாகி பறந்து செல்ல இறக்கைகள் உருவாக்கப்பட்டு முட்டை இட்டு குஞ்சு பொறிக்கும் உயிரினங்களும் உருவானது. எலும்புகளில் இணைப்புகள், பல உருவாகி உயிரினங்கள் எழுந்து நடமாடவும், நீரில் நீந்திச் செல்லும் உயிரினங்களும் உருவாகின. காடுகளிலும் மலைகளையும் கடந்து செல்ல கால்கள் பெரிதும் உதவின. இந்த உயிரினங்கள் உலகில் தக்க வைக்க ஆண் பெண் என இரு







வகையாக படைக்கப்பட்டது..

அதை குறிப்பது தான்

**ஐ எனும் எழுத்து**

ஐ என்பதே ஒரு உணர்வில் மகிழ்ந்தால் வரும் சத்தம் தான். ஆண் பெண் என இரு வேறு பாலினங்கள் ஈர்ப்பில் இணைந்து தங்கள் இனங்களை உலகில் தக்க வைத்து பெருக செய்வதற்கு இறைவன் உருவாக்கிய ஒரு அற்புதம் ஐ. ஊர்வன மற்றும்.பறவைகளாககட்டும், விலங்குகளாகட்டும், நீர் வாழ் உயிரினங்களாகட்டும் அனைத்தும் ஆண்பெண் ஈர்ப்பு இருப்பதால் தான் தங்கள் இனங்கள் பல்கி பெருகிக் கொண்டு உள்ளது. தங்கள் குட்டி உருவாக ஆண் பெண் இரண்டும் இன்பமாக இணைந்தால் மட்டும் போதும், வேறு எந்த செயல் வகைகளும் தேவையில்லை..



எந்த உறுப்புகளையும் நாம் வடிவமைக்க வேண்டியதில்லை.. தானாகவே சித்தத்தில் அந்த குட்டி எப்படி உருப்பெற வேண்டுமோ? அப்படி நன்கு உருப்பெற்று விடும். என்ன ஒரு இயற்கையின் அற்புதம். ஐ என்பதன் ஒலியும் அதைத்தான் உணர்த்துகிறது. ஆண்களுக்கு விரைப்பையில் விதைவடிவிலான சுனங்கி இருக்கும் உயிர்கள் விந்து நீரில் நனைந்து முளைத்து பெண்களின் கருப்பைக்குள் பீய்ச்சி அடிப்பதால் கருமுட்டை வரை சென்று கருமுட்டையை துளைத்த நொடியிலிருந்து வளர ஆரம்பிக்கிறது. வளர ஆரம்பிக்கும் உயிர் ஆணா அல்லது பெண்ணா என்பதை எப்படி முடிவு செய்யப்படுகிறது.

ஆண்கள் பெண்களை இன்புறுத்தி அவர்களுக்கு சுரோனிதம் வரும் வரைபுணர்ந்தால் , ஆண்களிடம் இருந்து வரும் விந்துவும், பெண்களின் சுரோனிதமும் கலந்து கருமுட்டைக்குள் சென்றால் அந்தக் குழந்தை ஆணாக பிறக்கும். பெண்கள் மகிழாமல் சுரோணிதம் சுரக்காது. விந்து மட்டும் கருமுட்டைக்குள் சென்றால் அந்த குழந்தை பெண்ணாக வளரும். இப்படி ஒரு சூட்சுமத்தை இறைவன் ஆண் பெண் படைப்பில் வைத்து இருக்கிறான். ஆணும் பெண்ணும் அன்னியோன்யமான குடும்பத்தில் ஆண் குழந்தை பிறந்து இருக்கும்.

உலகில் நான்கு விதமான யோனி பேதங்கள் உண்டு.

1. உப்புசத்தில் உயிரினங்கள் தோன்றுவது
2. விதையில் உயிரினங்கள் முளைப்பது.
3. முட்டையில் உயிரினங்கள் பொறிவது
4. குட்டி ஈன்று உயிரினங்கள் பிறப்பது.

நான்கு விதமாகத்தான் நம் பூமியில் உயிரினங்கள் உற்பத்தி ஆகி, தழைத்துக் கொண்டு உள்ளது.

**அடுத்த எழுத்து ஒ**

ஒ - என்பது ஒலியைபுரிந்து கொள்ள காதுகள் கொண்ட உயிரினங்கள் உருவாக்கம் தான் அடுத்த படைப்பு. காது உள்ள உயிரினங்களுக்கு சிறுநீரகம் இருக்கும். சீறுநீரகம் பார்க்க காது வடிவில் இருக்கும். ஒ - இல் நடுவில் உள்ள பறை போன்ற அமைப்பில் உள்ள Drum-ல் அதிர்ந்து அதைஉணர்ந்து கொள்ள மூளை வழியாக அதற்கு ஒரு ஏற்பாட்டினை இயற்கை வடிவமைத்துள்ளது. இந்த அதிர்வுகளைத்தான் சிவன் காலத்திலேயே அதிர்வு வேதமாக வடித்துக் கொடுத்து உள்ளார். நம் காதுகளில் கேட்கும் அதிர்வுகள் மிகவும் சிறியவை. அதாவது 0-20 kHz. தான். இந்த அதிர்வு தான் ஒரு நொடிக்கு 10 லட்சம், கோடியாக அதிர்வலை அதிகமாகும். போது கலர்களாக கண்களுக்குத் தெரிய ஆரம்பிக்கிறது. அதுவும் நம் பூமியைச் சுற்றி உள்ள வெளியில் தான் இந்த சாலங்கள் எல்லாம். இதைத்தாண்டி வளியில் கும்மிருட்டு மட்டும்தான். உலகில் ஒலியை உணர்ந்து அதை ரசிக்க முடிந்த உயிரினங்கள் அது

இல்லாமல் வாழ்வது கடினம். இது போல் ஐந்து வகையான புலன்களை இறைவன் இந்த உலகில், தன்மைகளை உணர்ந்து இன்பமாக வாழ மற்றும், வேண்டியவை, வேண்டாதவை என பிரித்து அறிந்து, வேண்டியற்றை ரசித்து புசித்து, வேண்டாதவற்றைத் தவிர்த்து உலகில் உயிர் வாழ இறைவன் கொடுத்தான். இந்த ஒலியைகேட்க காதுகளையும், ஒலியைஉருவாக்க தொண்டையில் வரும் காற்றை கட்டுப்படுத்தி வெவ்வேறு ஒலிகளை எழுப்பும் ஒழுங்கினையும் இயற்கை படைத்தது. சிவன் காலத்திலேயே அவர் இந்த ஒலியைபற்றி வேதமாக்கினார். அதனால் தான் அவர் கையில் உடுக்கை வடித்துள்ளார்கள். நாதம் தான் உயிர் உற்பத்தியாக ஒரு மூலமாக இருக்கிறது என அன்றேநம் மக்கள் உணர்த்தி இருக்கிறார்கள். இந்த அதிர்வை இன்னும் விரிவாக்கி அதன் தன்மைகளை விரித்துச் சொன்னதால் திருமாலுக்கு சங்கை கையில் வடித்து இருக்கிறார்கள். கிருட்டிணனுக்கு கையில் சக்கரம் ஒன்று கொடுத்தது, அவர் நம் Galaxy -ன் வடிவத்தை முழுமையாக விளக்கி அடுத்த ஊழியை கணித்ததால் அவருக்கு விரலில் சங்கு சக்கரத்தை கொடுத்தார்கள்.

நம்முடையை கடவுளர்கள் அனைவரும் அந்தந்த காலத்திற்கு ஏற்றவாறு நமக்கு இந்த இயற்கையை புரிய வைத்து நம்மோடு வாழ்ந்து காட்டி இருக்கிறார்கள். அவர்களுடைய உருவகங்களில் அவர்கள் காலத்தின் வரலாறுகள் கூறப்பட்டு இருக்கும். சிவன் புலித்தோல் அணிந்து இருப்பது போல் வடித்தது, அவர் காலத்தில் நெசவு தொழில் இல்லை என்பதை நமக்கு உணர்த்துகிறார்கள். முருகன் கோமனத்தாண்டி என்ற உருவகம் நெசவுத்தொழில் வந்தது என அறிவுறுத்தத்தான்.

இப்படி காலத்திற்கு ஏற்றவாறு அறிவியல் பயன்பாட்டினை நமக்கு பழக்கி தந்தார்கள். சிவன் தலையில் பிறைநிலா இருப்பது,



அந்த காலத்தில் நிலவை வைத்து காலத்தைஅறிந்து கொண்ட வரலாறை நமக்குக் கடத்துகிறார்கள். முருகன் பின்புலத்தில் சூரிய கதிர்கள் இருக்கும். அது சூரிய நாட்காட்டியை நமக்கு உருவாக்கிக் கொடுத்தவர் முருகன் என்பதை உணர்த்துகிறார்கள். சிவனுக்கு சூலாயுதம் இரும்பில் இருக்கும். இரும்பை அப்போதே உருக்கிப் பிரித்து இரும்பின் பயன்பாடு இருக்கிறது என அர்த்தம். உருவகங்கள் வரலாறை உணர்த்துபவை.


ஆனால் இந்த ஒ எனும் ஒலியை உள்வாங்கி புலன் பெற்ற காலம் வரை மனிதர்கள் இல்லை. ஐந்து புலன்கள் பெற்ற விலங்குகள், பறவைகள், நீர் வாழ் உயிரினங்கள் என பல்வேறு வகையான உயிரினங்கள் படைக்கப் பெற்றது. அண்ட வெடிப்பில் வெளிவந்த பொருள்களில் இருந்து உருவாகிய சூரியன் உருண்டு திரண்டு காந்தம் பெற்று நின்று மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே திரும்பி, மீண்டும் (Golden ratio) பொன்விகிதத்தில் சுற்றின் விட்டம் பெரிதாகிக் கொண்டேபின் சுழற்சியில் விரிந்து செல்லும். பின் சுழற்சியில் தான் பூமியில் உயிர்கள் உற்பத்தியாகி ஐந்து புலன்கள் கொண்ட உயிரினங்கள் வரும்வரை உலகில் ஊழிகள் நடக்கவில்லை. இதற்குப் பிறகு மனம் எனும் ஆறாவது புலனைக் கொண்ட மனிதனைப் படைக்கப் போகிறோம். அந்த மணம் படைத்த மனிதன் இயற்கையின் படைப்புகளை ஒவ்வொன்றாக அறிந்து புரிந்து அந்த இயற்கைக்கு எதிராக தன் செயல்களை செய்வான் என தெரிந்து

**அடுத்த எழுத்தான ஓ**

எனும் period - க்குள் நுழைகிறது உலகம். ஓ என்பது ஓலம். இதை வடித்தவர், புரிந்து நமக்கு உணர்த்தியவர் முருகன். ஓம் எனும் வடிவத்தை நமக்கு அளித்தவர் முருகன். இந்த ஓ என்பதன் அர்த்தம் உலகில் சூரியனுடைய ஒரு சுற்றில் மூன்று ஊழிகள் நடக்கும் என்பதை உணர்த்தத்தான். மற்ற ஐந்து புலன்களைப் பெற்ற உயிரினங்கள் படைக்கப்பட்ட பொழுது இந்த ஒரு சுற்றில் மூன்று ஊழிகளை உலகம் கண்டதில்லை. அதுவரை சூரியனின் சுற்று பெரியதாக இல்லை. ஆனால் இந்த சுற்று பெரிதாக வளையமாக (spiral) சிவத்தை நோக்கி ஒரே சீரான வேகத்தில் செல்லும் போது வளைவுகளில் மூன்று இடத்தில் தன் அச்சில்

மாற வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறது. எனவே உலகில் ஊழி என்பது நிகழ்வாக மாறுகிறது. இந்த நிகழ்வு அனைத்துக் கோள்களிலும், சூரியன்களிலும் நடக்கிறது. அங்கும் பெரும் புயல்கள், நிலங்களில் மாற்றங்கள் ஏற்படும். ஆனால் அங்கெல்லாம் நீரோ, உயிரினங்களோ இல்லை. நம் பூ உலகில் மட்டும் தான் உயிரினங்கள் இருப்பதால் இது ஊழியாக இருக்கிறது.

Spiral வடிவத்தில் பூமி சூரியனைச் சுற்றிக்கொண்டேசூரியனைப் பின்பற்றி அதன் வளைவுக்கேற்ப வளையும் போது பூமியின் அச்சு பத்து திகிரி வரை மாறுகிறது. அச்சலைவான இதைத்தான் ஆங்கிலத்தில் Precession என்று




கூறுவார்கள். அது ஒரே சீராக அச்சலைவாகாது. ஒவ்வொரு 90 திகிரியிலும் தான் அச்சு மாறும். இந்த பத்து திகிரி அச்சு மாற்றத்தால் பூமியில் கடல்கள் வடக்கிலும், தெற்கிலும் மாறி மாறி வடிகிறது. பூமியின் சாய்வால் உயரம் வேறுபடுகிறது. சில வேளைகளில் இமயமலை கூட பள்ளமாகி கடலை உள்வாங்குகிறது. இப்படி மாறும் போது சில நேரங்களில் இமயமலை உயரமாகிறது. அதனால் தான் இமய மலையில் சில ஏரிகள் இன்னும் கடல் நீராக இருக்கிறது. இமய மலையில் கடல் வாழ் உயிரினங்களின் படிவுகள் கிடைக்கிறது. கடல் வடிந்ததால் பாலைவனங்கள் உருவாகின்றது. சாஹர் ஆக இருந்தது சஹாரா வாக மாறுகிறது. இதை நம் வாழ்வியலில் தேர் ஓட்டமாக நமக்கு முன்னோர்கள் வடிவமைத்து காண்பித்து இருக்கிறார்கள். தேர் திரும்பும் நான்கு மூலைகளிலும் மக்கள் ஒன்றினைந்து தேரைத் திருப்ப வேண்டும். இதைப் பிறளி என்பார்கள்.


கோயிலின் நான்கு வீதிகளை கிழக்கு ரதவீதி, மேற்கு ரதவீதி, தெற்கு ரதவீதி, வடக்கு ரதவீதி என சதுரமாக்கி இருப்பார்கள். இந்த 90 திகிரி சூரிய நகர்வில் பூமி சீராக இருக்கும். திருப்பத்தில் ஊழி நடக்கும் என்பது தான் இந்தத் தேரோட்டத்தின்

கருத்தாகும். நமக்கு பாதகமான இந்த மூன்று ஊழி நடக்கும் இடங்களைத் தான் பூரம், உத்திரம் மற்றும் பூராடம், உத்திராடம், மற்றும் பூரட்டாதி, உத்திரட்டாதி என நட்சத்திரங்களுக்கு பெயர் சூட்டி இருப்பார்கள். நமக்கு சாதகமான ஒரு ஊழி திருவாதிரையில் நடக்கும். குறிஞ்சித் தினையிலிருந்து முல்லைத் தினைக்கு மாறும் ஊழி நமக்கு சாதகமான ஊழி. நம் கரத்தின் கடைசியில் இருக்கும் நட்சத்திரத்திற்கு மூலம் என்றும், அண்டத்தின் மையமான சிவம் இருக்கும் இடத்தை (திரு ஆதி ஒரை) திருவாதிரை நட்சத்திரமாக்கி உள்ளனர்

சூரியனின் ஒவ்வொரு சுற்றிலும் இந்த மூன்று ஊழிகள் நடக்கிறது. உண்மையில் உலகில் தென் கோளத்தில் மூன்று ஊழிகள் உணரப்படுகிறது. சூரியச் சுற்றின் ஒவ்வொரு 90 திதிரியிலும் ஒரு ஊழி நடக்கிறது. இனி வர இருக்கும் ஊழி தான் மூன்றாவது பெரும் ஊழி. ஓவில் உள்ள கீழே உள்ள சுழியம். ஓ வடிவத்தில் 360 திகிரி வடிவமாக பார்த்தால். இப்பொழுது சூரிய சுற்றின் கடைசி திகிரியையும் கடந்து விட்டோம். சூரியன் இப்பொழுது மேசத்தில் இருந்து மீனத்திற்கு மாறிவிட்டது. பூமி அடுத்த பெரும் ஊழியில் அடி எடுத்து வைத்து விட்டது. இனி தெற்கிலிருக்கும் கடல் வடக்கு நோக்கி வடியும். இந்த ஊழிக்குப் பிறகு 180 திகிரி வரை ஊழி இருக்காது.

அதன் பின்னர் ஓ வடிவத்தில் பத்து திகிரி சாய்வில் ஏழு திகிரி தான் குமரிக்கண்டம் மூழ்கிய போது நடந்தது. மீதி 3 திகிரி சாய்வு அதே திசையில் நடந்ததால் மீண்டும் வடக்கிலிருந்து கடல் தெற்கே வடிந்தது. அதனால் இன்னும் நிலங்கள் தென்





கோலத்தில் மூழ்கியது. அந்த சமயத்தில் தான் பூம்புகார் கடலில் மூழ்கியது. பூம்புகார் மூழ்கி அதன் பிறகு சூரியன் மூன்று ராசிகளை(90 திகிரி) கடந்து விட்டது. அதனால் அடுத்த ஊழியான

10 திகிரி சாய்வு வடக்கு நோக்கி தெற்கில் உள்ள கடல் நீர் 200 ஆண்டுகளில் வடியும். 200 ஆண்டுகளில் 126 ஆண்டுகள் முடிந்து விட்டது. இன்னும் 74 ஆண்டுகளில் தெற்கில் 3 கி.மீ ஆழமுள்ள கடல் மெதுவாக சாய்ந்து வடக்கு நோக்கி தாழ்ந்து செல்லும். தெற்கு உயரும். இது சூரிய Spiral சுற்றால் நடப்பது. இனி வரும் காலத்தில் குறிஞ்சித்திணை(கிரிதயுகம்) தான் உலகில் அதிகம் இருக்கும். இப்பொழுது உலகில் பாலைவனத் திணையின் (கலியுகம்) ஆட்சிதான் நடந்து கொண்டுள்ளது. மீண்டும் சூரிய சுற்றின் 90 திகிரியில் இன்னும் கடல் வடக்கு நோக்கி வடிந்து தெற்கில் முல்லை(தரையுகம்) நிலங்கள் வெளிவரும். அடுத்த 90 திகிரியில் மீண்டும் கடல் வடக்கில் இருந்து தெற்கு நோக்கித் திரும்பும். மருதம் நெய்தல் எனும் துவாபர யுகமாக இருக்கும். மீண்டும் பாலைத்திணை ஆட்சி. இப்படி உலகில் சூரிய சுற்றால் நடக்கும் நிகழ்வுகள் தான் இந்த ஊழிகள்.

இந்த ஏற்பாடு அடுத்த உயிரினம் மனிதன் படைக்கப்படுவதற்கு முன்னால் கட்டமைக்கப்படுகிறது. ஏனென்றால் மனம் எனும் ஆறாம் அறிவு படைத்த மனிதன் படைக்கப்பட்டால், இயற்கையை புரிந்து கொண்டு, இயற்கைக்கு




எதிராக தான் தான் இறைவனைவிட பெரியவன் எனும் அறியா புரிதலுக்கு வந்து ஆடுவான் என்பது இறைவனுக்குத் தெரியும். எனவே ஊழிகளை கட்டமைத்து விட்டால் ஒவ்வொரு ஊழியிலும் சிக்கி சின்னாபின்னமாகி, தான் இயற்கையின் தூசு என்பது அறிந்து கொள்ளத்தான் இந்த ஏற்பாடு. அடுத்து வரும் ம் எனும் ஓலத்துடன் வரும் ஊழிக்கு நாம் தயாராக வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். இதை அறியாமல் நவீன விஞ்ஞானம் எனும் மனித குலத்திற்கு எதிரான வாழ்வியலை கையில் வைத்துக் கொண்டு, வரும் ஊழியைப் பற்றி அறியாமல், நம் வாழ்க்கைச் சூழல்

தேவையற்ற விசயங்களில் நேரத்தைச் செலவிட்டு, எதையோநோக்கி ஓடிக்கொண்டு இருக்கிறோம்.

புவிப் பரப்பில் நம் தென் இந்தியா போன்று நல்ல சூழலுடன், நமக்குத் தேவையான அனைத்தையும், எந்த ஒரு நவீன கருவிகள் இன்றி, எளிமையான கருவிகளைக் கொண்டு 10 பேர் ஆடி பாடி வேலைசெய்தால் 100 பேர் உட்கார்ந்து சாப்பிட்டு கலைகளை வளர்க்கலாம். அவ்வளவு சுற்றுச்சூழல், வளம் நிறைந்த இடம். பூமியில் கடல் வடக்கு தெற்கு எங்கு நகர்ந்தாலும், பெரிய பாதிப்பு ஏதும் இல்லாமல், வாழ்வதற்கு ஏற்ற இடமாக இந்த நிலபரப்பு இருப்பதால் அதே நமக்கு பாதிப்பாக மாறலாம். நாம் தான் சூதானமாக இருக்க வேண்டும். நம் உயிர் எழுத்தில் ஓ வரை மனிதன் படைக்கப்படவே இல்லை. நம் மறை நூல்களில் ஒன்றான திருக்குறளின் முதல் குறளுக்கே இன்னும் விளக்கம் முடியவில்லை. ஓ வரை மனிதன் படைக்கப்பவில்லை.

**அடுத்த எழுத்தான ஔ**

எனும் காலத்தில் தான் மனிதன் படைக்கப்படுகிறான். ஐந்து புலன்களும், ஐந்து கருவிகளான வாக்கு, கை, கால், எருவாய், கருவாய் படைக்கப்பட்டது. ஐந்து புலன்கள்தான் இந்த உலகை நன்கு புரிந்து கொள்கிறது. நின்ற இடத்தில் இருந்து புரிந்து கொள்ளாமல் உலகின் பல பகுதிகளுக்குச் சென்று ரசிக்க, புசிக்க கால்கள் படைக்கப்பட்டது.. எடுத்துப் பார்க்க கைகள் படைக்கப்பட்டது.. ஒலியை கேட்பது மட்டும் அல்லாமல் ஒலி உருவாக்க தொண்டைவாய் என புனரமைந்தது. மனிதனுக்காக அந்தக் கரனங்களான நான் எனும், அகங்காரம், மனம், இறைவனால் படைக்கப்பட்டது. மனிதன் மட்டும் தான் இந்த உலகையும், வானத்தையும் பார்த்து இறைவனையும், புரிந்து உலகை ரசிக்க ஆரம்பித்தான். ஏனெனில் இவ்வளவு பிரம்மாண்டமான இயற்கை இவ்வளவையும் படைத்ததை யாரும் பார்த்து வியக்கவோ! ரசிக்கவோ! உயிர்கள் இல்லாவிட்டால் அனைத்தும் பயனற்றதாகி விடும் என்பதற்காக மனம் படைத்து இந்த உலகில் மனிதர்களை உலவ விட்டது.

இறைவனுக்குத் தெரியும் ரசிப்பதற்காக படைக்கப்பட்ட மனத்தை இயற்கையை புரிந்து கொண்டு இயற்கையை வென்று



விடலாம் என மற்ற உயிரினங்களைப் பாடாய் படுத்துவான என்று. அதனால் தான் இயல்பாகவே ஊழியையும் படைத்து மனிதனை மறுபடியும், மனிதன் உருவாக்கிய அனைத்தையும் அழித்து மீண்டும் முதலிலிருந்து ஆரம்பிக்க வைப்பான். ஒவ்வொரு 26,666.666 ஆண்டுகளுக்குள் மூன்று ஊழிகளை உருவாக்கி கடல்களை வடக்கும் தெற்குமாக அலைக்கழித்து, பிறள் லயமாக மாற்றிப் போடுவான்.

இந்த மனித உடல் உண்மையில் 240 ஆண்டுகள் வாழ படைக்கப்பட்டது தான். எப்படி என்றால் உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் தான் பருவம் அடையும் வயது x 20 அதனுடைய வாழ்நாள். அதை அனைத்து வகையான உயிரினங்களும் வாழ்ந்து முடிக்கிறது. மனிதன் 12 வயதில் பருவம் அடைகிறான் x 20 = 240 ஆண்டுகள் உண்மையில் உயிர் வாழ வேண்டும். ஆனால் மனம் படைக்கப்பட்டதால் 120 ஆண்டுகள் தான் உயிர் வாழ முடிகிறது. விளையாட்டு

இந்த இயற்கையை புரிந்து கொண்ட நம் தமிழ் முன்னோர்கள் அதனுடன் இயைந்து வாழ்க் கற்றுக் கொண்டனர் ஓசையிலிருந்து தான் ஆகாயம் பிறந்தது என புரிந்து கொண்டனர். ஊறு எனும் உணர்தல் காற்றிலிந்து பிறந்து இருக்கிறது என்றும், வெளிச்சதம் எனும் ஒளியிலிருந்து தான் அக்னி எனும் வெப்பம் உருவானது. என்பதைஅறிந்து கொண்டனர். நீரிலிருந்து தான் சுவைஎன்பதையும், வாசனைஎன்பது நிலத்திலிருந்து உருவானது என்பதையும் நன்கு உணர்ந்து அந்த இயற்கைக்கு ஊறு விளைவிக்காமல் இயற்கைஅளித்த கொடைகளை ஏற்றுக்கொண்டு அதன் இயல்புகளை அறிந்து அதனோடு ஒத்து வாழ சில

நடைமுறைகளை உருவாக்கி, தன் குழந்தைகளுக்கும் கடத்தி நல்ல வாழ்வியலை உருவாக்கி வாழ்ந்தனர்.

அதனால் தான் அனைத்து உலோகங்களையும் உருக்கிப் பிரிக்கத் தெரிந்தும் வீட்டில் உணவு சமைக்க மட்பாண்டங்களை மட்டும் பயன்படுத்தினர். இறைவன் படைத்த கை,கால், வாய், எரு, கரு எனும் கருவிகளை அளவாக பயன்படுத்தி முறையாக வாழ்ந்தனர். அடுத்த உயிரினங்களையும் மதித்து அதனுடன் உறவாடி மகிழ்ந்தனர்.

முருகன் காலத்தில் ஊழியிலிருந்து வெளிவந்த அனைவருக்கும் உடனே உணவு வேண்டும் என்பதற்காக மருத நிலங்கள் உருவாக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட உணவுகளை அவருக்குப் பின் 2000 ஆண்டுகளுக்குப் பின் வந்த குபேரன் காலத்தில் வியாபாரமாக்கி பெரும் பொருள் குவித்ததை நம் முன்னோர்கள் ஒத்துக் கொள்ளாமல் இராவணன் என்பவரால் அந்த உணவு உற்பத்தியை சேவையாக்கி அனைவருக்கும் பிரித்து வழங்கப்பட்டு கலைகளை வளர்க்க தலைப்பட்டனர். இராவணன் காலத்தில் வீணை உருவாக்கப்பட்டது.. அவர் காலத்தில் தான் சோதிடம் உருவாக்கப்பட்டது.

பத்து வகையான கலைகளில் தேர்ச்சி பெற்றவராகவும், மற்றும் 10 திகிரி நிலவின் நலுவலைக் கண்டுபிடித்தவர் இராவணன். அதாவது நிலா தினமும் 13 திகிரி நகர்ந்து அமாவாசையிலிருந்து அமாவாசை 390 திகிரி தான் நகர்கிறது என்றும். 27 நட்சத்திர நகர்வில் தினமும் 13.33 இல்லாமல் 400 திகிரி - 390 = 10 திகிரி. அவர் காலத்தில் இந்திரனால் சாக்கா நாட்காட்டி உருவாக்கப்பட்டது. மூன்று வருசத்துக்கு ஒருமுறைஎச்சு மாதம்



என இந்திர விழாவாக கணக்கில் வராத மாதமாக்கப்பட்டது.

இப்படி இயற்கையை, இறைவனை, புரிந்து கொண்டு இயற்கையின் விதிகளை மீறாமல் வாழ்ந்தனர். ஒள எனும் காலத்தில் படைக்கப்பட்ட மனிதன் உலகெங்கும் பயணித்து கொஞ்சம் கொஞ்சமாக உலகினையும் மற்ற உயிரினங்களையும் புரிந்து கொள்ள ஆரம்பித்தான். மனம் வேலை செய்ய ஆரம்பித்து எங்கே இருந்தாலும் அந்த சூழலில் வாழ்வது எப்படி என கற்றுக் கொள்ள ஆரம்பித்தான்.



**இராவணனுடைய அரண்மனைசிகிரியா கோட்டை.**

இந்த உலகம் முக்குணங்களால் தான் உருவாக்கப்பட்டு இருக்கிறது. சாத்வீகம் எனும் நல்ல குணத்தால் படைக்கப்பட்டவை. தான் இந்த மனம், மெய், நாக்கு, கண், மூக்கு, செவி எனும் ஆறு புலன்கள். இவை நல்ல குணத்தால் உருவானவை. அடுத்த குணமான முயற்சி எனும் ராட்சச குணத்தால் தான் வாக்கு, பாதம், கை, எருவாய், கருவாய் உருவாக்கப்பபட்டது. அடுத்து தாமசம் எனும் மயக்கம் தான் இந்த ஊறு, ஓசை, ஒளி, சுவை, நாற்றம் எனும் உலகம். இந்த தன்மாத்திரைகளால் தான் நாம் இந்த உலகை அறிந்து கொள்கிறோம். இவை அனைத்தும் மயக்கங்கள் என நம் முன்னோர்கள் அனேக ஊழிகளை கடந்து புரிந்து கொண்டனர்.

அகங்காரம் எனும் நான் உருவாகி, காலம் உருவாகி, குணங்கள் உருவாகி மனம் படைக்கப்பட்டு, புலன்கள், கருவிகள், தன்மாத்திரைகள் என உருவாக்கித் தான் மனிதன் படைக்கப்பட்டான். இந்த தன் மாத்திரைகளில் இருந்து

உருவானவைதான் இந்த பஞ்ச பூதங்களான

| | | |
|---|---|---|
| **ஆகாயம்** | - | **சத்தம்,** |
| **காற்று** | - | **ஊறு,** |
| **வெப்பம்** | - | **ஒளி,** |
| **சுவை** | - | **நீர்,** |
| **வாசனை** | - | **மண்.** |

இந்த ஐந்து பூதங்களால் தான் இந்த பூமி படைக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து பூதங்களால் ஆனது தான் நம் உடல் எனும் மெய், இதைத்தான் வள்ளுவர் தன் நீத்தார் பெருமை எனும் அதிகாரத்தில்

**சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என ஐந்தின் வகை**
**தெரிவான் கட்டே உலகு**

என்றார்.

இப்படி காலங்களை முருகன் காலத்திலேயே 12 ஆக பிரித்து அதற்கு உயிர் எழுத்து என பெயரிட்டார். நம் திருச்சியை தலைநகராகக் கொண்டு ஆண்ட ஆண்டவர் ஆன திருமால் தான் இப்பொழுது உள்ள எழுத்துக்களை, அதன் வடிவங்களுக்கும் அர்த்தம் உள்ளவாறு மாற்றி அமைத்தார். அவர் 12 எனும் எண்ணை, அதன் உண்மைத் தன்மையை உணர்ந்து, அதை மாற்றாமல் எழுத்தின் வடிவங்களை மட்டும் மாற்றினார். ஒ என்பது சத்தம் ள என்பது சித்தம். சத்தமும் சித்தமும் சேர்ந்ததுதான் ஒள எனும் மனம். ஊ - வில் உள்ள ள என்பதும் சித்தம் தான். நம் உடலில் தானாக இயங்கக் கூடிய உறுப்புகள் எப்படி இயக்கப்படுகிறது என்றால் சித்தம் எனும் அறிவினால் தான். தானாக இயங்கும் உறுப்புக்களுக்குத் தேவையான சக்திகளை, நாம் உண்ணும் உணவிலிருந்து எடுக்காது. அது பிரபஞ்ச ஆற்றலை தானாக எடுத்துக் கொண்டு இயங்கும் . அதை தானாக விட்டு விட வேண்டும். அதை நம் மனதால் தான் தடை செய்கிறோம். அமைதி, நிம்மதி எனும் உணர்வுகள் மட்டும் தான் நம் உண்மையான இயல்பான உணர்வுகள். இந்த கோபம், துக்கம், கவலை, பெருமிதம், பயம் போன்றவை சூழ்நிலைக்கு ஏற்றவாறு, தெரிந்தே பயன்படுத்தி விட்டுவிட வேண்டும். ஏனெனில் அதை சூழ்நிலைக்கு ஏற்றவாறு பயன்படுத்து விட்டுவிட ஒரு

ஏற்பாடாகத்தான் இறைவன் அந்த உணர்ச்சிகளை படைத்துள்ளான்.

இந்த துக்கம், கவலை, கோபம், பெருமை, பயம் எனும் உணர்ச்சிகளால் நம் உள் உறுப்புக்களை தாக்குகிறோம். அதனால் தான் அவை சித்தம் பாதித்து பிரபஞ்ச ஆற்றலை எடுக்கும் தகுதி இழந்து விடுகிறது. அது தான் நோயாக நம் உடலைத் தாக்குகிறது. இந்த உண்மை நமக்குப் புரிந்து விட்டால் நம் உடல் சித்தம் பாதிக்காமல் சும்மா இருந்தாலே உடல் பழுதில்லாமல் நன்கு இயங்கும். உடல் நன்கு இருந்தால் உள்ளம் நன்கு இருக்கும். உள்ளம் செம்மையானால் மனம் செம்மையாகும். மனம் செம்மையானால் எந்த மந்திரமும் தேவையில்லை. இதைத் தான் திருமந்திரத்தில் திருமூலர் கூறியுள்ளார். நம் உயிர் எழுத்து, மெய் எழுத்து , உயிர் மெய் எழுத்து, ஆயுத எழுத்து என 247 எழுத்துக்களும், 96 தத்துவங்களையும், இந்த உடல் உருவாக காரணமான 120 தனிமங்களையும், காலங்களையும், உடல் உறுப்புகளையும் குறிப்பனவாகும். தத்துவங்கள் எனும் போது உயிர் எழுத்து 12 காலங்களில் 36 தத்துவங்கள் உருவாகித்தான் மனம் எனும் தத்துவம் உருவாகி மனிதன் படைக்கப்படுகிறான். மீதம் உள்ள 60 தத்துவங்கள் தான் உடல் எனும் மெய். நம் தமிழ் எழுத்துக்களே மெய் இயல் கோட்பாடுகள் தான். தமிழ் எழுத்துக்களை முழுமையாக உள் வாங்கினாலே உண்மையான மெய் இயல் கொண்ட வாழ்வியல் புரிந்து விடும். முழுமையான அறிவியலும் புரிந்து கொள்ள முடியும். எனவே குழந்தைகளுக்கு 6 வயது முதல் அ முதல் னௌ வரைவடிவங்களை பழக்கப்படுத்தி 12 வயதிலிருந்து அதன் அறிவியல் தன்மைகளையும், தத்துவங்களையும், 24 வயது வரை பக்குவமாக சொல்லித் தர வேண்டும்.

இப்படி ஔ வரை உயிரெழுத்துக்களைப் பார்த்து விட்டோம். இனி உடல் எனும் மெய் எனும் உண்மை என்ன என்பதை 18 மெய் எத்துக்களின் வடிவங்களைப் பார்ப்போம்.

விண்ணியலும் வாழ்வியலும்


# மெய் எழுத்துக்கள்

**மெய் எழுத்துக்கள் 18**

மெய் எழுத்துக்கள் மொத்தம் 18. அதைநாம் வல்லினம் - 6, மெல்லினம் - 6, இடையினம் - 6, என மூன்று பிரிவுகளாகப் பிரித்து. வல்லினம், **க ச ட த ப ற**, என்றும், மெல்லினம் - **ங, ஞ, ண, ந, ம, ன** எனவும், இடையினம், **ய, ர, ல, வ, ழ, ல** என்றும் படித்திருக்கிறோம். ஆனால் நாம் மறந்தது, இந்த எழுத்துக்கள் நம் உடலின் உள் உறுப்புகளைக் குறித்து வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதைத்தான்.

நம் தமிழ் எழுத்துக்களில் மட்டுமே மெய் எழுத்திற்குப் புள்ளிகள் வைக்கப்பட்டு இருக்கிறது. அந்த புள்ளிகள் குறிப்பது தூரத்தில் தெரியும் விண்மீன்கள் நம் சூரியனைப் போல ஒரு பெரிய வட்டத்தில் மேற்கு கிழக்காக சுற்றிக் கொண்டே வடக்கில் திரும்பி ஈர்ப்பு விசையால் தெற்கு நோக்கி சென்று கொண்டு இருக்கிறது. ஆனால் அது வெகு தொலைவில் இருப்பதால் அது புள்ளியாக நகராதது போல் தெரிகிறது. அது போல நம் உறுப்புகளில் உள்ள உயிரணுக்களும் அசைவற்று இருப்பது போல் இருக்கும். ஆனால் உள்ளேநிறைய அசைவுகள் 8 வகையான சக்திகளால் இருக்கும். நாம் மெய் எழுத்துக்களை இக், இங், இச்...... என ஒவ்வொரு மெய் எழுத்தையும் இ சேர்த்து தான் உச்சரிக்கிறோம். இ எனும் எழுத்து உயிரணுவைக் குறித்து அணுக் கோட்பாடு கொண்ட எழுத்து இந்த உடலில் உள்ள அனைத்தும் உயிர் அணுக்களைக் கொண்டு கட்டப்பட்டு இயக்கத்தில் இருக்கிறது என குறிக்கத்தான் மெய் எழுத்துக்களை, இக், இங், இச், இஞ்....... இன் என இ சேர்த்து சொல்கிறோம்.

நம் தமிழ் மெய் எழுத்துக்களை கங, சஞ, டண, தந, பம, யரலவழள றன என்று தான் வரிசைப்படுத்தி இருக்கிறார்கள்.



இதில் ற்ன் என்பதை யரல வழள எனும் இடையினத்திற்குப் பின்னர் தான் வருகிறது. இதிலிருந்து நம் உடலில் இயங்கும் ஆறு சக்கரங்களின் முதல் சக்கரமான மூலாதாரம் எனும் சக்கரத்தின் எழுத்துகளைஅடையாளப் படுத்தத்தான் அந்த ற் ன் எனும் வல்லின மெல்லின எழுத்துக்களை தனிமைப்படுத்தி இருக்கிறார்கள். மூலாதாரம் என்பது முதல் சக்கரமாக இருந்தாலும், அது நம் முதுகுத் தண்டின் கீழ் நுனியிலிருந்து இயங்கும். எனவே ற்ன் என்பது நம் இனப்பெருக்க உறுப்புகளை குறிப்பது. கங , சஞ, டண, தந, பம என்பது ஐந்து ராச உறுப்புகளையும், ஐந்து துணை உறுப்புகளையும் குறிப்பது. யரலவழள என்பது சுரப்பிகளைக் குறிப்பது.

கங என்பது சோடி எழுத்து. கங்கை எனும் வார்த்தையில் ங் க்கு பின் வரும் கை என்பது Kai என்று இல்லாமல் gai என உச்சரிக்கப்படுகிறது. எனவே இதற்கென்று தனி எழுத்து தேவையில்லை. (சங்கு, பங்கு, குரங்கு )

சஞ என்பதில் வஞ்சம் எனும் சொல்லில் ஞ் க்குப் பின் வரும் ச Sa - வாக ஒலிக்காமல் Ja - வாக தானாக ஒலிக்கும். (கஞ்சன், தஞ்சம், பஞ்சம்)

ட்ண ல் தண்டனை எனும் சொல்லில் ட என்பது ta என்று இல்லாமல் da என தானாக ஒலிக்கும் (கண்டான், மண்டபம், வண்டல், .... )

தந் - ல் தந்தை எனும் சொல்லில் ந் - க்குப் பின் வரும் தைஎன்பது Tha - வாக ஒலிக்காமல் dha - வாக தானாக ஒலிக்கும். (மந்தை, வந்தான், பொந்து, கந்தன் ..)

ப்ம் . - ல் பம்பரம் எனும் சொல்லில் ம் -க்குப் பின் வரும் ப என்பது pa- வாக ஒலிக்காமல் Ba - வாக தானாக ஒலிக்கும். ( சம்பவம், தாம்பரம், வம்பு, சொம்பு......)

ற்ன் - ல் வென்றான், எனும் சொல்லில் ன் க்குப் பின் வரும் ற் tra என்று ஒலிக்காமல் dra என தானாக ஒலிக்கும். (மன்றம், தென்றல், மன்றாடு....)

இப்படி வல்லினமான ஆண் எழுத்துக்களை மெல்லினமான பெண் எழுத்துக்கள் வலிமை குன்றச் செய்து மென்மையாக்குகிறது. எனவேதான் தமிழில் தேவையற்ற

வல்லின எழுத்துக்கள் இல்லை.


தமிழ் மொழியை உருவாக்க யாரும் அவசரப் படவில்லை. அதன் போக்கில் விட்டு ஆயிரக் கணக்கான ஆண்டுகள் தழைத்து வளர்ந்த மொழி. அதை யார் அழிக்க நினைத்தாலும் முடியாது. எங்கேயாவது சுவற்றின் மேல் ஓரத்திலாவது தங்கி முளைத்து விடும்.

தமிழில் மட்டும் தான் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என இரு வேறு இயல்புகள் உள்ளது. பேச்சு வழக்கில் உள்ள வார்த்தைகளின் அர்த்தங்களை எத்தனை A I வந்தாலும் கண்டுபிடிக்க முடியாது. ஆயிரம் அர்த்தங்கள் மாறுபடும். செய்யே! செஞ்சு பாரே! என்பதை எப்படி அர்த்தம் கொள்வது. எனவே நம் மறை நூல்களில் பெரும்பாலும் பேச்சு வழக்கில் உள்ள சொற்களைபயன் படுத்தி இருப்பார்கள். எனவேதான் வேறு யார் படித்தாலும் புரியாது,

செய்யுள்களை, பன்னாங்கு சொல்லி பாடி இருப்பார்கள். அந்த தாளத்தை மாற்றிப் பாடினால் அர்த்தம் மாறிவிடும். நாம் பயப்படாமல் பேச்சு வழக்கில் பயன்படும் சொற்களாக நினைத்து திருக்குறளையோ அல்லது, திருமந்திரத்தையோ? திருவாசகத்தையோ? ஒரு முறைக்கு பதிலாக ஐந்து ஆறு முறை சும்மா வாசித்தாலே நமக்கு உண்மையான அர்த்தம் புரிந்து விடும். பின்புதான் தெரியும், அனைத்து உரைஆசிரியர்களும், நம்மை கேனயன்களாக நினைத்து உரை எழுதி இருப்பது.

## மெய் எழுத்தின் முதல் எழுத்து க்

நம் மெய் எழுத்துக்களில் அனைத்திலும் மேலே ஒரு மூக்கு இருக்கும். அது ஒழுங்கான இயக்கத்தில் இருப்பதைக் குறிக்கும். ஈ-ல் உள்ள மூக்கு குறிப்பது. போல் நம் அனைத்து உயிரணுக்களும் வடககில் திரும்பி தெற்கு நோக்கி ஈர்க்கப்







படுவதைத் தான் குறிக்கின்றன. க - வில் இ-ல் உள்ளது போல கீழே இரண்டு வளைவுகளும், மேலே ஒரு வளைவும் இருக்கும். கீழே உள்ள இரண்டு வளைவுகளும், நம் இரண்டு கண்களையும், மேலே உள்ள வளைவு நம் நெற்றிக்கண்ணான புருவ மத்தியை குறித்து ஆகாய சக்தியை கொண்டு இயங்கும் எழுத்தாக வடிவமைக்கப் பட்டுள்ளது.

நம் சித்தர் பாடல்களில் இடது கண்கள் சந்திரன் வலது கண்கள் சூரியன் என வரும். பார்க்கும் கண்களை மட்டும் குறிப்பிட்டு இருந்தால் வலது கண், இடது கண் என குறிப்பிட்டு இருப்பார்கள். ஆனால் வலது கண்கள் என குறிப்பது நம் முகத்தில் உள்ள அனைத்து துளைகளையும் கண்கள் என குறிக்கிறார்கள். வலது புறம் உள்ள மூக்கின் துளை, வாய், கண், காது என இருக்கும் அனைத்தும் சூரியனாக (ஆணாக அதாவது பொருளாக) உருவகம் செய்கிறார்கள். இடது புறம் உள்ள கண், காது, மூக்கு, நாக்கு, உதடு என இருக்கும் துளைகளை சந்திரானாகவும் (பெண் அதாவது சக்தி) உருவகம் செய்கிறார்கள். நம் உடலின் இடது பாதி பெண்ணாகவும், வலது பாதி ஆணாகவும் தான் உருவகப் படுத்தி இருக்கிறார்கள்.





க வில் உள்ள மேல் வளைவு புருவ மத்தியான நம் உயிர் தங்கி, இந்த ஐந்து புலன்களிலிருந்து வரும் செய்திகளைக் கொண்டு இந்த உலகினைப் புரிந்து கொள்கிறது. இது ஆகாய சக்தியைக் குறித்து இயங்கும் ராச உறுப்பான கல்லீரலைக் குறிக்கின்றது. நம் உடலின் மிகப் பிரதானமான முதல் உறுப்பாக கல்லீரலைத்தான் க குறிக்கிறது. கல்லீரலை வெளிப்படுத்தும் உறுப்பாக கண்கள் இருக்கிறது. கண்கள் எனும் புலன் உள்ள உயிரினங்களுக்குத் தான் கல்லீரல் இருக்கும்.

நாம் உண்ணும் உணவில் உள்ள சத்துக்களை பிரித்து இரத்தத்தில் கலந்து, நரம்புகளின் மூலமாக அனைத்து உயிரணுவான செல்களுக்கும் கொண்டு சென்று சக்திகளாக மாற்றி, உயிரணுக்கள் வெளியேற்றும் கழிவுகளை இரத்தத்தின் மூலம் எடுத்து வந்து அதைகழிவுகளாக வெளியேற்றி, எருவாய் வழியாக வெளியேற்றுகிறது. மலம் வெளியேறும் உறுப்பைஎருவாய் என குறித்தார்கள் நம் முன்னோர்கள். ஏன்? நமக்கு வெளியேறும் கழிவு அடுத்த ஏதாவாது உயிரினத்திற்கு எருவாக இருக்கும். அதனால் கழிவாய் என கூறாமல் கருவாய் என கூறினார்கள். கல்லீரலின் வடிவம் கண்களைப் போன்று இருக்கும். கல்லீரலில் ஏதாவது நோய் அறிகுறி எனில் கண்கள் காட்டிக் கொடுத்து விடும்.

ஆகாய சக்திக்கு வெள்ளைநிறத்தையும், வியாழன் கோளையும் உருவகப்படுத்தி இருப்பார்கள். வியாழன் கோள் குருவாகவும், ஆசான்களைக் குறித்தும் இருக்கும். வியாழன் கோள் என்பது நான்கு கரணங்களில் ஒன்றான புத்தியைகுறிக்கும். புத்தி என்பது விசாலமான அறிவு. நம் வீடு, குடும்பம், நம் உடல் என சிந்திப்பது அறிவு. புத்தி என்பது அறிவைக் கொண்டு ஊருக்கும், ஒரு பெரிய குழுவுக்கும், நாட்டுக்கும், உலகுக்கும் யோசித்து வேலை செய்வது.




வியாழன்


ஆசான்களின் குணம் அது தான். வியாழன் சூரியனை ஒரு முறை சுற்றி வர 12 வருசங்கள் எடுத்துக்கொள்கிறது.


இந்த 12 வருசத்தை நம் உடல் வளர்ச்சியின் ஒரு பருவமாக கொண்டனர். நம் முன்னோர்கள் ஆகாயம் எனும் இந்த முதிர்ச்சி அடைந்த பருவத்தை 6-ம் பருவமாக 60 வயது முதம் 72 - வயது வரை உள்ள பருவத்தைக் குறித்தார்கள். இந்த வயதில் தான் ஆசான்களாக தங்கள் அனுபவத்தை 12 வயது முதல் 24 வயது வரை உள்ள இரண்டாம் பருவமான வாலிப பருவத்தில் உள்ளவர்களுக்கு சொல்லித்தர வேண்டும்.

இந்த பருவத்தில் உள்ள ஆசான்கள் வெள்ளை ஆடை உடுத்துவார்கள். நம் உடலின் வெள்ளை அணுக்களான எதிர்ப்பு சக்தியும் (Immune System) இதைத் குறிப்பது தான். கல்லீரல் பெரிதும் பாதிப்பது இந்த கோபம் எனும் உணர்ச்சியால் தான். கோபம் நேரடியாக கல்லீரலை பாதிக்கும். அளவுக்கு அதிகமான கோபம் கல்லீரலை பாதிக்கும். நாம் உண்ணும் உணவினால் கல்லீரல் 5% தான் பாதிக்கும். ஆனால் 95% இந்த கோபத்தினால் மட்டுமே பாதிக்கும். எனவே கோபம் என்பதை சரியாக புரிந்து அதை சரியான தருணங்களில் வெளிப்படுத்த வேண்டும். அடிக்கடி கோபம் கொள்வது நம் கல்லீரலுக்குப் பிடிக்காது.

**அடுத்த எழுத்து ங.**

ங உள்ள மூக்கு ஏற்கனவே சொன்னது தான். வளைவு பித்தப்பையை குறிப்பது. கல்லீரலில் ஒட்டி இருக்கும் பித்தப்பை(Gallbladder) , நாம் உண்ணும் உணவு வந்து சேரும் இரைப்பைக்குத் தேவையான அமிலங்களை இந்த பித்தப்பை தந்து, உணவுடன் கலந்து சிறு குடலுக்கு கடத்தும். அந்த அமிலங்கள் உருவாகும் பை தான் பித்தப்பை. இது கல்லீரலின் துணை உறுப்பு.



பித்தம் என்றால் வெப்பம் என பொருள்படும். பேரண்டத்தில் இருந்து வெளிவரும் வெப்ப ஆற்றலை பயன்படுத்தி பித்தப்பையில் அமிலங்கள் சுரக்கின்றன். அந்த பித்த அமிலங்கள் (Bile Acids) நம் உணவுகளை சிதைத்து சீரணம் செய்து அதில் உள்ள கொழுப்பு, மற்றும் சத்துக்களை சிறு குடலின் துணை கொண்டு பிரித்து எடுத்து இரத்தத்தில் கலந்து விடுகிறது. மேலே உள்ள படத்தில் Liver என்பது கல்லீரல். Stomach என்பது இரைப்பை. Gallbladder என்பது பித்தப்பை. Bile என்பது அதில் சுரக்கும் அமிலங்கள்.

ஆடு, கோழி அறுப்பவர்களுக்குத் தெரியும், இந்த கல்லீரலுடன் ஒட்டி கொண்டு இருக்கும் இந்த பித்தப்பையை, அலுங்காமல் குலுங்காமல் பிரித்து எடுக்க வேண்டும். அந்த பித்தப்பை உடைந்து விட்டால் மொத்தக் கறியும், கசப்பாக மாறிவிடும். எனவே அதை பக்குவமாக பிரித்து எடுப்பார்கள். இப்படி நம் தமிழ் எழுத்துக்களை சரியாக உள்வாங்கி, புரிந்து படித்தாலே அண்டத்தையும், நம் உடலைப் (பிண்டத்தை) பற்றியும் நன்கு உணரலாம்.

பித்தப்பை என்பது கல்லீரலின் கீழே, வயிற்றின் வலது பக்கத்தில் உள்ள ஒரு சிறிய, பேரிக்காய் வடிவ உறுப்பு. இது கல்லீரலில் தயாரிக்கப்படும் பித்தத்தை சேமித்து, செரிமானத்திற்கு உதவுகிறது. பித்தப்பை பித்தத்தை சேமித்து வைத்திருந்து, கொழுப்பு உணவை செரிமானப்படுத்தும் போது, பித்தத்தை குடலுக்குள் விடுவிக்கிறது.

**பித்தப்பையின் முக்கிய செயல்பாடுகள்:**

1. பித்தத்தை சேமித்து வைத்திருத்தல்.

2. பித்தப்பை கல்லீரலில் உற்பத்தி செய்யப்படும் பித்தத்தை சேமித்து வைத்திருந்து, தேவைப்படும் போது குடலுக்குள் விடுவிக்கிறது.

3. செரிமானத்திற்கு உதவி செய்தல்.

4. பித்தம் கொழுப்பை உடைத்து, செரிமானத்திற்கு உதவுகிறது.

**அடுத்த எழுத்து ச.**

ச எனும் எழுத்து வெப்பத்தைக் குறித்து நம் இதயத்தைக்


குறிக்கும் எழுத்தாகும். வெப்பத்தைக் குறித்தது என்றால் நாக்கை குறிக்கும். இதயத்தில் ஏதாவது நோய் என்றால் நாக்கைப் பார்த்தால் அறிவித்து விடும்.

கொல்லன் பட்டரையில் இரும்பைக் காய்ச்ச துருத்தி எனும் கருவி உபயோகிப்பார்கள். 'ச' வை அந்த வடிவத்தில் தான் வடித்து இருப்பார்கள். நம் முன்னோர்கள் இரும்பை உருக்க சாதாரண கரியும் இந்த துருத்தியையும் பயன்படுத்தி 1500 திகிரி செலிசியஸ் வரை வெப்பத்தை உருவாக்கினார்கள். 'ச' என்ற எழுத்து வெப்பத்தைக் குறிப்பதற்காக துருத்தியைப் போல் வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. வெப்பத்தை கட்டுப்படுத்தி இருதயம் இரத்தத்தை உடலில் உள்ள அனைத்து உயிரணுக்களுக்கும் கடத்தி அதில் உள்ள கழிவுகளைவெளியேற்றி அதை அந்தந்த உறுப்புகளுக்கு கொண்டு சென்று சேர்க்கிறது.





இருதயம் லப்டப் என தானாக பிறந்ததிலிருந்து இறக்கும் வரை தொடர்ந்து இயங்கிக் கொண்டு இருக்கும். இந்த உறுப்பும் இயங்குவதற்கு பிரபஞ்சத்தில் இருக்கும் ஆற்றலைத்தான் பயன்படுத்துகிறது. நாம் மூக்கின் வழியே இழுக்கும் மூச்சு வயிற்றுக்குள் சென்று அனைத்து உள்ளுறுப்புகளையும் கடந்து சென்று மூக்கின் வழியே வெளியேறும். அந்த காற்றிலிருந்து சக்தியை பெரும்பாலும் எடுத்துக் கொள்கிறது. நுரையீரலுக்குச் செல்லும் காற்றைவிட வயிற்றுக்குள் செல்லும் காற்று தான் அதிகம்.





இருதயம் ரத்தத்தை அழுத்தம் கொடுத்து கால் நுனியிலிருந்து தலை வரை கொண்டு சேர்க்கிறது. இந்த உள் உறுப்புகள் எல்லாம் இயங்குவதற்கு பிரபஞ்ச ஆற்றல் என்றால், நம் ஐந்து கருவிகளான கை, கால், வாய், எருவாய், கருவாய் இயங்குவதற்குத்தான் நம் உண்ணும் உணவிலிருந்து எடுக்கும் சத்துகள் பயன்படுத்தப்படுகிறது. ஐம்புலன்களுக்கான கருவிகளான கண், காது, மூக்கு, நாக்கு, தோல் இதுவும் இயங்க நாம் உண்ணும் உணவில் இருந்து சத்துக்கள் பெறுகிறது. ஆனால் இந்த புலன் உறுப்புகளிலிருந்து பெறப்படும் செய்திகளை தொகுத்து உலகை அறிந்து கொள்ளும் அந்த அனாதியான உயிருக்கு, பிரபஞ்சத்திலிருந்தும், நாம் உண்ணும் உணவிலிருந்தும் சத்துக்கள் எடுப்பதில்லை. உணர்ச்சிகள் நாம் பாதிக்கும் போது பிரபஞ்ச ஆற்றலை கிரகிக்கும் சக்தியை நம் உள்உறுப்புகள் இழந்து விடுவதால், அவை பாதிப்புக்கு உள்ளாகிறது. எனவே, கவலை, துக்கம், கோபம், பெருமை, பயம் எனும் உணர்ச்சிகளில் இருந்து விடுபட்டு உடலை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நாக்கும், இருதயமும் வடிவத்தில் ஒரே மாதிரியாக தோன்றும். இருதயத்தின் பாதிப்புகளை நாக்கை பார்த்து மதிப்பீடு செய்யலாம்.. ச எனும் எழுத்து வெப்பத்தைக் குறித்து சிவப்பு நிறம். கோள் - செவ்வாய்.



**செவ்வாய்**


நான்காம் பருவமான 36 வயதிலிருந்து 48 வயது வரையிலான பருவத்துக்குக் காரர்கள் சிவப்பு நிறத்தை அடையாளப்படுத்தி உழைப்புக்குச் சொந்தமான நிறம். இந்த பருவத்தில் தான், தான் பெற்ற குழந்தைகளுக்குத் தேவையான செல்வத்தை உருவாக்கக கடுமையாக உழைப்பார்கள். செவ்வாய்க்கு முருகனை அதிபதியாக வைத்திருப்பார்கள். அறம் சார்ந்து நேர்மையாக உழைப்பவர்களுக்கு செல்வம் சேரும்.


பொருள் வேறு செல்வம் வேறு. செல்வம் தானாக பெருகும். பொருள் தானாக அழிந்து விடும். இந்த பருவத்துக்காரர்கள் உடுத்தும் ஆடை பெரும்பாலும் சிவப்பாக இருக்கும். தெய்வம் வள்ளியம்மன்.

இருதயம் 90% பாதிக்கப்படுவது பெருமை எனும் உணர்ச்சியால். பெரும்பாலும், பெருமைக்காக வாழ்பவர்கள் மாரடைப்பால் மாண்டு போவார்கள். அந்த பெருமைக்கு எப்பொழுதாவது சிறு இழுக்கு வந்தாலும். மாரடைப்பு தான். அதனால் உணர்ச்சிகளில் மாட்டாமல் எதையும் கடந்து செல்ல வேண்டும்.

**அடுத்த எழுத்து ஞ.**

இந்த எழுத்தில் எ எனும் எலும்புகளைக் குறித்த வடிவம் இருக்கிறது. எலும்பு மச்சையில் தான் இரத்தம் உருவாகி இருதயத்திற்கு வந்து உடல் முழுதும் கொண்டு செல்லப்படுகிறது.



என்பதைத் தான் இந்த எழுத்துக் குறிக்கிறது.


இரத்தம் இந்த எலும்பு மச்சைகளுக்குள் உற்பத்தியாகி இருதயத்திற்கு வந்து இருதய லப்டப் எனும் இயங்கு அழுத்தத்தால் உடல் முழுதும உள்ள உயிர் அணுக்களுக்குச் சென்று அணுக்களுக்கு தேவையான சக்தியை கொடுத்து இயங்க வைத்து அதன் கழிவுகளை இரத்தத்தின் மூலம் கடத்தி கழிவுகளாக பிரித்து வெளியேற்றுகிறது.

உடலின் அசைவுக்குத் தகுந்தவாறு இரத்தம் உற்பத்தியாகும். மிகினும் குறையினும் நோய் செய்யும். எனவே உடலின் அசைவுகளும் அளவாக இருக்க வேண்டும். அதேபோல் உடலின் வெப்பத்தை மாறாமல் காப்பதும் இந்த அசைவுகள் தான். உடல் இயக்கம் இருந்தால் இரத்தம் உருவாகி உடல் சரியான வெப்பத்தில் இருக்கும். சோம்பேரித்தனமாக உடலை இயக்காமல்

உட்கார்ந்து இருந்தால் இரத்தம் உற்பத்தியாகாமல் கடினமான தன்மையாவதால் இரத்த ஓட்டம் பாதிக்கும். எனவே உடல் அசைவுகள் இருக்க வேண்டும். வேலை செய்தால் தான் உடல் ஆரேக்கியமாக நோய் இன்றி இருக்கும். பொருளாதாரம் இருக்கிறது. என வேலை செய்யாமல் இருப்பதே இப்பொழுது நோய் அதிகமாக இருப்பதற்குக் காரணம்.

ஞ போல் வளை என ஔவையார் சொல்வதன் காரணம் நம் அசைவுக்கேற்ற இரத்தம் உருவாகி உடல் முழுதும் பரவி உள்ள நரம்புகள் வழியாக நன்கு ஓடுவது போல் அனைவரிடமும் வளைந்து கொடுத்து பழகினால் தான் நட்புறவு இருக்கும். ஓடி ஆடி வேலை செய்வதற்கு தேவை இருக்கும். யாரிடமும் வளையாமல் சேராமல் இருக்கக் கூடாது என்பதைத்தான் ஔவையார் அப்படி சொல்கிறார்.


உடலை வருத்தி வேலை செய்வதும் தவறு. வேலை செய்யாமல் சோம்பேறியாக இருப்பதும் தவறு. எனவே இயற்கையை நன்கு உணர்ந்து அதன் இயல்புக்கேற்ற இயக்கத்தில் இயங்க வேண்டும்.





சிறு குடலும் இதயத்தின் துணை உறுப்புகளில் ஒன்று. நாம் சாப்பிடும் உணவுகளில் இருந்து சத்துக்களைப் சிறு குடல் பிரித்து அதை இரத்தத்தில் கலந்து அனைத்து உயிரணுக்களுக்கும் சென்று சேரும்.

**அடுத்த எழுத்து ட்.**

ட என்பது மூக்கின் வடிவில் இருக்கும். நுரையீரலைகுறித்து காற்று பூதத்தைக் குறிப்பது.



மனிதனுக்கு மனம் எனும் ஆறாவது புலன் இருப்பதால் தான் மனிதன். அந்த மனம் இயங்கம் இடம் இதயம் தான். அந்த மனம் காற்றின் மூலமாகத்தான் எண்ணமாக இதயத்தை அடைகிறது. அந்த காற்றை மூக்கின் வழியாக உள்ளிழுத்து நுரையீரலுக்கும், வயிற்றிற்க்குள்ளும் செல்கிறது. காற்றில் உள்ள உயிர்க்காற்றான oxygen - ஐ நுரையீரலால் இரத்தத்தில் செல்லும் நீர்த்தன்மையாக மாற்றம் செய்யப்படுகிறது. இந்த நீர்த்தன்மையாக மாற்றப்பட்ட காற்று இரத்தத்தில் கலந்து அனைத்து உயிரணுக்களுக்கும் அனுப்பப்படுகிறது. உயிரணுக்களில் சக்தியாக மாறி கழிவான அசுத்தக் காற்று நீர்மமாக இரத்தத்தில் கலந்து நுரையீரலை அடையும் . அது நுரையீரலால் வெளியேறும் காற்றாக மாற்றப்பட்டு மூக்கின் வழியாக வெளியேறுகிறது. இந்த வெளியேறும் காற்று சூடாக இருக்கும் . அதை மூச்சுப் பயிற்சி செய்கிறேன் என்று அழுத்தமாக வெளியேற்றக் கூடாது. அது இயல்பாக வெளியேற அனுமதித்து கவனிக்க வேண்டும். அவ்வளவே.





நுரையீரலைப் பற்றித் தெரிந்து கொள்ள உதரவிதானம் தெரிந்து கொள்ள வேண்டும். வயிற்றுக்கும் மார்புக்கூட்டுக்கும் இடையே உள்ள ஒரு படலம் தான் உதிரவிதானம்.

இந்த உதரவிதானம் சுருங்கி விரிவதால் தான் மூச்சுக்காற்றிலுள்ள உயிர்க்காற்றை நீர்மமாக மாற்றி மச்சையில் உருவாகும் ரத்தத்தில் கலந்து விடும். அதன் பிறகு இரத்தத்தின் பெயர் உதிரமாகிறது. உயிரணுக்களில் எரிந்த கழிவுகள் இரத்ததில் கலந்து நுரையீரலை அடைந்தால் அதை கரியமில வாயுவாக மாற்றி மூக்கின் வழியே வெளியேற்றிவிடும். இந்த வேலையை செய்ய நுரையீரல் சவ்வு சுருங்கி விரிந்து செய்கிறது.

நுரையீரலின் வடிவம் மூக்கு போலவே இருக்கும்.

கழிவுகளாக வெளியேறும் இரத்தத்தையும் உதிரம் என்பார்கள்.




**இடைத்திரைதான் உதரவிதானம்.**

நுரையீரலுக்கு கோள் புதன். நிறம் மஞ்சள். ஐந்தாவது பருவம் 48 வயதிலிருந்து 60 வயது வரை, செல்வம் சேர்க்கும் பருவம் இதுதான். இதுவரை உழைத்த உழைப்பை செல்வமாக்குவது எப்படி? எனும் அனுபவம் கிடைக்கும். எனவே கனகாம்பிகை தெய்வம். தங்கம் சேர்க்கும் பருவம். புதன் கோளின் மற்றொரு பெயர் அறிவன்.


mercury எனும் மதன் கோள் சூரியனுக்கு மிக அருகில் உடன் சுற்றுவதால் புதன் எனப்பட்டது. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்பது வழக்கம். புதன் கோளை பார்ப்பது அரிது. வெறும் கண்ணால் பார்க்க முடியும். ஆனால் சூரியன் அருகில் இருக்கும். மாலை நேரம், மற்றும் அதிகாலையில் மட்டும் தான் தெரியும். அரைமணி நேரத்தில் மறைந்து விடும்.

**அடுத்த எழுத்து ண்.**

ண என்பது மெல்லினம். இது நுரையீரலின் துணை உறுப்பான பெருங்குடலைக் குறித்த எழுத்து.

பெரும்பாலும் நுரையீரல் பாதிக்கப்படுவது துக்கத்தால் தான். சாப்பிடும் உணவுகளில் 5% தான் பாதிக்கும்.

95% பாதிக்கப்படுவது துக்கத்தால் தான் உணவுகளில் இருந்து சத்துக்களை பிரித்து இரத்தத்தில் சுத்தமான சத்துக்களாக




கலக்க வேண்டும் என்றால் பெருங்குடலும், நுரையீரலும் இணைந்து வேலை செய்ய வேண்டும். அதற்குத் தேவையான சக்தியை பிரபஞ்சத்தில் இருந்து தானே எடுத்துக் கொள்ளும். ஆனால் துக்கப்படுவதால், அதனை வேலை செய்ய விடாமல் அதற்குண்டான சக்தியை துக்கம் தீர்த்து அந்த உறுப்புகளை பாதிப்படைய செய்து விடும். அடிக்கடி யாருக்கெல்லாம் பெருமூச்சு வருகிறதோ? துக்கத்தில் இருக்கிறார்கள் என அர்த்தம்.

காற்றினால் தான் பெருங்குடலில் தேங்கும் கழிவுகள் வெளியேற்றப்படும். நுரையீரல் பாதிக்கப்பட்டால் கழிவு தேங்கும். மற்றும் தொடு உணர்தல் எனும் உணர்விலிருந்து தான் காற்று பிறந்தது. எனவே தோல் நன்றாக இருக்க வேண்டும் எனில் நுரையீரல் நன்கு வேலை செய்ய வேண்டும்.

பெரும்பாலான தோல் நோய்களுக்கு காரணம், நுரையீரல் செயல்பாடு குறைவது தான். சுவாச நோய்களுக்கும் , தோல் நோய்களுக்கும் துக்கம் தான் காரணம்.

**அடுத்த எழுத்து த்.**

த என்பது நிலத்தைக் குறித்து மண்ணீரலைக் குறிப்பது. தரையிலிருந்து அதாவது மண்ணிலிருந்து சத்துக்களை எடுத்து உடலுக்கு மேலே கொண்டு செல்வது போல எழுத்தின் வடிவம் இருக்கும்.




மண்ணீரல் என்பது வயிற்றின் இடது பக்கத்தில் உள்ள ஒரு முக்கிய உறுப்பு. இது இரத்தத்தை வடிகட்டி, சேமித்து, பழைய இரத்த அணுக்களை அகற்றி, நோய்த்தொற்றுகளுக்கு எதிராக போராட உதவுகிறது. மேலும், வெள்ளை இரத்த அணுக்கள் (White Blood Cells) மற்றும் தட்டணுக்கள் (platelets) போன்றவற்றை சேமித்து வைக்கிறது.




**மண்ணீரலின் முக்கிய வேலைகள்:**

- **இரத்த வடிகட்டுதல்:** மண்ணீரல் இரத்தத்தில் உள்ள பழைய மற்றும் சேதமடைந்த இரத்த அணுக்களை அகற்றி, ஆரோக்கியமான இரத்த அணுக்களை உருவாக்குகிறது.
- **இரத்தம் சேமிப்பு:** மண்ணீரல் இரத்தத்தை சேமித்து வைக்கிறது, தேவைப்படும் போது உடலுக்கு தேவையான இரத்தத்தை வழங்குகிறது.
- **நோய் எதிர்ப்பு:** மண்ணீரல் வெள்ளை இரத்த அணுக்களை (White Blood Cells) உருவாக்கி, நோய்த் தொற்றுகளுக்கு எதிராக போராட உதவுகிறது.
- **இரும்பு மறுசுழற்சி:** பழைய இரத்த அணுக்கள் சிதைந்து, அவற்றிலிருந்து இரும்பு மறுசுழற்சி செய்யப்படுகிறது, இது இரத்த அணுக்களின் உருவாக்கத்திற்கு உதவுகிறது.

மண்ணீரல் பாதிப்படைய காரணம் கவலை தான். கவலை கொண்டு இருந்தால் பசிக்காது. சாப்பிட முடியாது. உடல் சோர்வடைந்து காணப்படும்.

மண்ணீரலுக்கு உண்டான கோள் வெள்ளி. நிறம் பச்சை. தெய்வம் பச்சை அம்மன், மீனாட்சி, ஆண்டாள். வெள்ளி கோல் இல்லற வாழ்வை குறிப்பது. மூன்றாம் பருவமான பயிர் செய்யும் பருவத்தைக் குறிப்பது. அதாவது இந்த பருவத்தில் குழந்தை பெற்றுக் கொள்வது தான் தலையாய பணியாக இருக்க வேண்டும். தாய் தந்தையரின் அரவணைப்பில் பாதுகாப்பில் இருந்து கொண்டு குழந்தைபெற்றுக் கொண்டு இந்த பருவத்தில் அதை பேணி வளர்க்க வேண்டும்.




வெள்ளி

**அடுத்த எழுத்து ந்.**

ந என்பது மண்ணீரலின் துணை உறுப்பான வயிறு எனும் இறைப்பையை குறித்தது.

இரைப்பை (Stomach) என்பது முதுகெலும்பிகள், பூச்சிகள், மெல்லுடலிகள், முட்தோலிகள் உள்ளிட்ட விலங்குகளின் சமிபாட்டுத் தொகுதியில் மிக முக்கியமான சமிபாட்டை நிகழ்த்தும் ஓர் அகன்ற அறையாகும். இது உணவுக்குழாய் (அல்லது களம்) (Oesophagus), சிறுகுடல் ஆகிய பகுதிகளுக்கு இடையில் அமைந்துள்ளது. உதரவிதானத்திற்குக் (Thoracic diaphragm) கீழாக உள்ளது. இதன் வடிவமும் அளவும் உள்ளிருக்கும் உணவின் அளவினைப் பொறுத்து அமையும். உணவு உள்நுழையும் வேளையில் அதிகபட்சமாக 1.5 லிட்டர் அளவிற்குப் பெரிதாகும்.

இரைப்பையின் இயக்கம் குடல் அலைவுகளை ஏற்படுத்தும். ஒவ்வொரு அலைவும் இரைப்பையின் மைய உடற்பகுதியிலிருந்து தோன்றிப் பின்னோக்கிச் செல்லும்.




பின்னோக்கிச் செல்லும் முதல் அலைவு இரைப்பைக்கும், சிறுகுடலின் தொடக்கப் பகுதியான முன்சிறுகுடல் (Duodenum) பகுதிக்கும் இடையில் உள்ள பைலோரஸ் சுருக்குத் தசைகளைச் சுருங்கச் செய்யும். இரைப்பையின் உள்சுவற்றில் பல இரைப்பைநீர்ச் சுரப்பிகள் உண்டு. ஏறக்குறைய 40 மில்லியன் நுண்ணிய சுரப்பிகள் உள்ளன. இவற்றில் முதன்மையான உயிரணுக்கள் (chief cells) நொதிகளையும், சுவர் உயிரணுக்கள் (parietal cells) எனப்படும் ஆக்ஸின்டிக் (Oxyntic) உயிரணுக்கள் ஐதரோகுளோரிக் காடியையும் (HCl) சுரக்கின்றன. ஐதரோகுளோரிக் காடியினால் நொதியச் செயல்பாட்டிற்கு தேவையான அமிலத்தன்மை கிடைக்கிறது. இரைப்பையின்

பெப்சின், ரெனின் போன்ற நொதியங்கள் சுரக்கப்படுகின்றன. இரைப்பையில் உமிழ்நீர் கலந்த உணவு சென்று , அதில் அமிலங்கள் கலந்து , பிசைந்து சிறு குடலுக்கு தள்ளி விடப்படுகிறது. உணவு இறைப்பையிலிருந்து சிறு குடலுக்கு வெளியேறும் போது, இறைப்பையில் வெற்றிடம் ஆகும். அதை நிரப்ப நமக்கு ஏப்பம் ஏற்ப்பட்டு , இறைப்பைக்குள் காற்று சரி செய்யப்படுகிறது.


**அடுத்த எழுத்து ப்.**

ப எனும் வடிவம் பாத்திரம் போல இருக்கும். நீர் பிடிக்கும் குண்டா போல இருக்கும். நீர் பூதத்தைக் குறித்து சிறுநீரகத்தைக் குறிப்பது.



நீர் உருவம் பெற்று இருக்கும். ஆனால் வடிவம் இருக்காது. எதில் ஊற்றுகிறோமோ அதன் வடிவம் பெற்று விடும்.

எனவே ப எனும் வடிவம் நீர் குறித்து குறிக்கும் எழுத்து சிறுநீரகம் எனும் ராச உறுப்பைத்தான் ப எனும் எழுத்து குறிக்கிறது. சிறு நீரகத்தின் பாதிப்பை காதுகள் அறிவிக்கும். காதில் கேட்பதில் குறைபாடு சிறுநீரக குறைபாடு என புரிந்து கொள்ளலாம்.






**சிறு நீரகம் மற்றும் காது**

சிறுநீரகமும் காதும் வடிவத்தில் ஒத்து இருக்கும்.

சிறுநீரகத்தின் தொழில்கள் குருதியின் அமில-கார நிலையைப் பேணுவதன் மூலம், அயன்களின் செறிவைப் பேணுவதன் மூலம், நீர்ச்சமநிலையைப் பேணுவதன் மூலம், குருதியமுக்கத்தைப் பேணுவதன் மூலம், கழிவகற்றலின் மூலம் முழு உடலின் ஒருசீர்த்திட நிலையைப் பேணுவதில் சிறுநீரகம் முக்கிய பங்கைவகிக்கின்றது.

சிறுநீரகத்தின் முக்கியப் பணி, கழிவுப் பொருட்களை சிறுநீரின் வழியாக வெளியேற்றுவதே.


வடிகட்டுதல், மீண்டும் உறிஞ்சுதல், சுரத்தல்: சிறுநீர் உருவாக்கத்தின் மூன்று படிகள் சிறுநீரகங்கள் இரத்தத்தில் உள்ள தேவையற்ற பொருட்களை வடிகட்டி சிறுநீரை உற்பத்தி செய்து அவற்றை வெளியேற்றும். சிறுநீரை உருவாக்கும் மூன்று முக்கிய படிகள் உள்ளன: வடிகட்டுதல், மறுஉருவாக்கம் மற்றும் சுரப்பு

சிறுநீரக செயலிழப்புக்கு முக்கிய காரணம் பயம் தான். சிறு நீரகமும் சித்தத்தால் பிரபஞ்ச ஆற்றலைக் கொண்டு இயங்கும் தன்மை பெற்றது. அந்த ஆற்றலை பயம் உறிஞ்சி வீண் செய்து விடும். அதனால் சிறுநீரகம் பாதிக்கும். குடிக்கும் நீரினால் பாதிப்பதைவிட பயத்தால் அதிகம் பாதிக்கும். குடிக்கும் நீரினால் ஏற்படும் நோய் தீர்க்க அவகாசம் கிடைக்கும் சரி செய்து விடலாம். ஆனால் பயத்தை நோயாளிகள் தான் விட வேண்டும்.

**அடுத்த எழுத்து ம்.**

ம என்பது சிறுநீரகத்தின் துணை உறுப்பான சிறு நீர்ப்பையை குறித்த எழுத்து.

காதுக்கும், ம் எனும் சத்தத்திற்கும், சிறு நீர்ப்பைக்கும் வடிவத்திற்கும் தொடர்பு உண்டு. சிறுநீர்ப்பையின் ம- இல் உள்ள வடிவத்தில் தான் இருக்கும். சிறுநீரகத்தில் வடிக்கப்படும் நீர் சிறு




நீர்ப்பையில் சேர்த்து நிறைந்தவுடன், நாம் நினைக்கும் போது வெளியேற்றுமாறு வடிவமைக்கப்பட்டு உள்ளது. பயம் எனும் உணர்ச்சி சிறு நீர்ப்பையின் செயல்பாட்டையும் பாதிக்கும்.

எந்த பிரச்சினையையும் எதிர்கொண்டு கடந்து செல்ல பழகிக் கொள்ள வேண்டும். மனிதனின் உண்மையான உணர்வான, அமைதி, நிம்மதி, ஆனந்தம் என வாழ்வைக் கழிக்க முற்பட வேண்டும். இனி வரும் காலம் ஊழிக்காலம். எனவே பயம், துக்கம், கவலை, பெருமை, கோபம் இவற்றை கலைந்து நிம்மதியாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஏனெனில் அனைத்து உள் உறுப்புகளும், சித்தத்தால் பிரபஞ்ச ஆற்றலால் இயங்குபவை. அதை நாம் தான் இந்த உணர்ச்சிகளால் அதை இயங்க விடாமல் பாதிப்படைய வைக்கிறோம். நிரந்தர உணர்ச்சிகளுக்கு வயப்படாமல் பழக வேண்டும். இறைவன் கொடுத்த உணர்ச்சிகளை அவ்வப்பொழுது பயன்படுத்தி நடித்துக் கொண்டு விட்டு விட வேண்டும்.

இயல்பான மனித சிறுநீர்ப்பை (urinary bladder) மனிதர்களிடமும் சில விலங்குகளிலும் சிறுநீரகங்களிலிருந்து வெளியேறும் சிறுநீரை, சிறுநீர்க்கழிப்பாக வெளியேற்றும் முன்னர், சேகரித்து சேமிக்கும் ஓர் வெறுமையான தசைஉறுப்பு அல்லது பை ஆகும். மனிதர்களில் இது கூபகத்தளத்தில் அமர்ந்துள்ள வெறுமையான தசையாலான விரிவடையக் கூடிய உறுப்பாகும். சிறுநீர்ப்பைக்கு சிறுநீர்க்குழாய் வழியாக வரும் சிறுநீர் சிறுநீர்வழி மூலமாக வெளியேறுகிறது. இயல்பான மனித நீர்ப்பை சிறுநீர் வரும் உணர்வைத் தூண்டுவதற்கு முன்னர் 300க்கும் 500 மிலிக்கும் (10.14 - 16.91 நீ அவு) அளவிலான சிறுநீரை சேமித்து வைக்க முடியும்.




சிறுநீர்ப்பை ம வடிவத்தில் சிறு நீரகத்துடன் இணைந்து

இருக்கும்.

சிறு நீரகம் நீர் தத்துவத்தில் இயங்குகிறது. இதன் கோள் சந்திரன். நிறம் நீலம்.



**சந்திரன்**

**அடுத்து இடையினமான ய, ர, ல, வ, ழ, ள**

- இவை 6 -ம் சுரப்பிகளைக் குறித்த எழுத்துக்கள்.
- இந்த இடையின எழுத்துக்களை உச்சரிக்கும் போது தொண்டையிலிருந்து உச்சரிப்போம்.

திருக்குறளின் இரண்டாம் குறலான

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**

**நாற்றாள் தொழாஅர் எனின்.**

என்ற குறளின் அர்த்தம் என்னவென்றால். நாம் உலகில் உள்ள அனைத்துக் கல்விகளிலும் கற்றுத் தேர்ந்தாலும் அவற்றிலெல்லாம் முதன்மை , மற்றும் ஆன பயன் என்னவென்றால் அந்த வால் பற்றி அறிந்து அதை கருமுட்டைக்குள் நாற்றி உயிர் எப்படி தரிக்கிறது. என அறிந்து அவனை தொழுவது தான் . அப்படி அந்த சுக்கிலத்தில் உயிர் பெற்று நீந்தி வரும் அந்த வால் தான் நம் முதுகுத்தண்டு. அந்த வால் கருமுட்டையில் தரித்து உடல் உறுப்புகள் வளர்ந்து குழந்தையாக பிறந்து முதல் மூச்சு விட்டு உயிர் பெற்று அழுக ஆரம்பித்த தருணம்தான் குழந்தையின் சாதக காலம் ஆரம்பிக்கும்.

இந்த வால் பற்றி முருகன் அன்றே நுண்ணோக்கி மூலம் பார்த்து அறிந்து அதை வேலாக வேளாண்மையின் குறியீடாக கையில் வைத்து இருக்கிறார். இரண்டாம் சங்கத்தை வழி

நடத்தியவர் முருகன். எனவே இரண்டாவது குறளாக முருகனை போற்றி எழுதப்பட்டது. அந்த குறள்.

முருகன் படத்தில் பாம்பு இருக்கும். அது அவர் குண்டலினி சக்தி அடைந்தவர் என்பதன் குறியீடு.

சிவன் காலத்திலிடுந்தே நம் உடலை 6 சக்கரங்களாக பிரித்து வகைப்படுத்தி அதை அனைவருக்கும் கற்றுத்தந்து வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள். நம் முன்னோர்கள். சிவன் காலத்திலேயே 7 கோள்களையும் கண்டறிந்து , அதை வாரத்தில் ஏழு நாட்களாக்கி மக்கள் புழக்கத்த்தில் விட்டு அனைவருக்கும் எளிமையாக தெரியும்படி பார்த்துக் கொண்டனர். அன்றிலிருந்து இன்றுவரை அது மாறவில்லை.

ஆறு சக்கரங்களில் முதலாவதாக

1. மூலாதாரம். - சனி - கருப்பு.

2. (சுக்கிலம், சுரோணிதம்) சு வதி தானம்.. - திங்கள் - நீலம்

3. (time) மணி பூரகம். - வெள்ளி - பச்சை

4. அனாகதம் - செவ்வாய் - சிவப்பு

5. வி சுத்தி. - புதன் - மஞ்சள்

6. ஆக்கு நெய் ( ஆக்கினை) - வியாழன் - வெள்ளை

உடலுக்கு வெளியே சகசராரம் எனும்


7. வது சக்கரம். அது ஞாயிறு - நீர் வண்ணம்.

இந்த சக்கரங்களை குறித்து சுரப்பிகளைக் குறிப்பது தான் இந்த இடையின எழுத்துக்களான ய, ர, ல, வ, ழ , ள என்பது. அதே போல் நம் உடலில் நின நீர் மண்டலம் எனும் தனி நரம்பு மண்டலம் உள்ளது.


நிணநீர் என்பது உடலின் திசுக்களில் இருந்து திரவம், கழிவுகள் மற்றும் நோய்த் தொற்றிலிருந்து போராடும் செல்களைச் சேகரிக்கும் ஒரு நிறமற்ற திரவம்.

இது நிணநீர் மண்டலம் மூலம் பாய்ந்து, உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்திற்கு உதவுகிறது.

நிணநீர் என்பது உடலின் ஒரு முக்கிய பகுதியாகும். இது செல்கள் மற்றும் திசுக்களுக்கு ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது,



படம் 4: தன்னாட்சி நரம்பு மண்டலத்தின் செயலை விளக்குவது. 1 தானாக இயங்கும் நரம்பு முடிச்சு 2. தானாக இயங்கும் சங்கிலித் தொடர் நரம்பு முடிச்சுகள் 3. விழித் திரை 4. உமிழ் நீர்ச் சுரப்பி 5. இதயம் 6. இரப்பை 7. மண்ணீரல் 8. மாங்காய்ச் சுரப்பிகள் 9. குடல் 10. சிறுநீர்ப்பை 11. இனப்பெருக்க மண்டலத்தின் குருதிக் குழல்.





கழிவுகளை வெளியேற்றுகிறது, மற்றும் நோய்த் தொற்றுகளுக்கு எதிராக போராடும் செல்களைக் கொண்டுள்ளது.

நிணநீர் மண்டலம், நிணநீர் சுரப்பிகள், நிணநீர் நாளங்கள் மற்றும் நிணநீர் முனைகள் மூலம் ஆனது. நிணநீர் நாளங்கள், உடலின் பல்வேறு பகுதிகளிலிருந்து நிணநீரை சேகரித்து, நிணநீர் முனைகளுக்கு கொண்டு செல்கின்றன. நிணநீர் முனைகள், நிணநீரை வடிகட்டி, நோய்த் தொற்றுகளுக்கு எதிராக போராடும் செல்களை உற்பத்தி செய்கின்றன.

நிணநீர் மண்டலம், நோயெதிர்ப்பு மண்டலத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். இது உடலை நோய்த் தொற்றுகளிலிருந்து பாதுகாக்கிறது.

**அடுத்த எழுத்து ய்.**


இந்த எழுத்து ஆறாவது சக்கரமான ஆக்கு நெய் எனும் ஆக்கினை சக்கரத்தை குறிக்கும் எழுத்து. இது தலையில் உள்ள மூன்று சுரப்பிகளைக் குறித்த வடிவம். ய மேல் நோக்கிய மூன்று



கோடுகளை இணைத்து குறியீடு கொடுத்து இருப்பார்கள்.

- ஆனந்த சுரப்பி (Pineal gland)
- இதமான சுரப்பி (Pitutary gland)
- பின் கல சுரப்பி (Thalamus gland )

ஆனந்த சுரப்பி அல்லது கூம்புச் சுரப்பி அல்லது பீனியல் சுரப்பி (pineal gland) முதுகுநாணிகளின் மூளையில் இரு பெரும் பகுதிகளுக்கு இடையேயும் மூளையின் நடுப்பகுதியிலும் காணப்படும் ஓர் அரிசியின் அளவே உள்ள சிறிய சுரப்பி ஆகும். மூன்றாவது கண் எனவும் அழைக்கப்படும் இது ஐந்து முதல் எட்டு மில்லி மீட்டர் அளவே உள்ளது.




இந்த சுரப்பி தூக்கத்தையும், விழிப்பு நிலையையும் கட்டுப்படுத்துகிறது.


மெலடோனின் உற்பத்தி மற்றும் தூக்க ஒழுங்குமுறை - மெலடோனின், பீனியல் சுரப்பியால் சுரக்கும் முதன்மை ஹார்மோன், தூக்கம்-விழிப்பு சுழற்சியை நிர்வகிக்கிறது. அதன் சுரப்பு தூக்கத்தின் நேரத்தையும் தரத்தையும் சீராக்க உதவுகிறது, மறுசீரமைப்பு ஓய்வை ஊக்குவிக்கிறது.

பிட்யூட்டரி சுரப்பி, ஆண்களில் தைராய்டு, அட்ரீனல் மற்றும் டெஸ்டிகல்ஸ் மற்றும் பெண்களில் கருப்பைகள் போன்ற பிற நாளமில்லா சுரப்பிகளின் செயல்பாட்டை ஒழுங்குபடுத்துகிறது, முன்புற மற்றும் பின்புறத்திலிருந்து வெவ்வேறு ஹார்மோன்களை சுரக்கிறது.

முக்கியமான நாளமில்லாச் சுரப்பிகள்:

**1.** பீனியல் சுரப்பி

**2.** பிட்யூட்டரி சுரப்பி




**3.** தைராய்டு அல்லது கேடயச் சுரப்பி

**4.** தைமஸ் சுரப்பி

**5.** அண்ணீரகச் சுரப்பி

**6.** கணையம்

**7.** சூலகம் (பெண்)

**8.** விந்தகம் (ஆண்)

நாளமில்லாச் சுரப்பிகள் அல்லது **நாளமில் சுரப்பிகள்** (இலங்கை வழக்கு: **கானில் சுரப்பிகள்** அல்லது **அகஞ்சுரக்கும் சுரப்பிகள்**, ஆங்கிலம்: endocrine glands) என்பவை தாம் சுரக்கும் இயக்குநீர்களை, நாளங்களினூடாகக் கடத்தாமல், நேரடியாக இரத்தத்தில் கலக்க விட்டு உடலின் பல பகுதிகளுக்கும் அனுப்பும் சுரப்பிகளாகும். இவை


பின் கல சுரப்பி (Thalamus gland )

உங்கள் தாலமஸ் என்பது உங்கள் மூளையின் நடுவில் உள்ள ஒரு முட்டை வடிவ அமைப்பாகும். இது உங்கள் உடலில் இருந்து உங்கள் மூளைக்கு வரும் அனைத்து மோட்டார் (இயக்கம்) மற்றும் புலன் தகவல்களின் - கேட்டல், சுவை, பார்வை மற்றும் தொடுதல் (ஆனால் வாசனை அல்ல) - ரிலே ஸ்டேஷன் என்று அழைக்கப்படுகிறது. ஒரு ரிலே அல்லது ரயில் நிலையத்தைப் போலவே, அனைத்து தகவல்களும் முதலில் உங்கள் தாலமஸ் வழியாகச் சென்று, மேலும் செயலாக்கம் மற்றும் விளக்கத்திற்காக உங்கள் மூளையின் பெருமூளைப் புறணியில் (உங்கள் மூளையின் வெளிப்புற அடுக்கு) அதன் இலக்கை நோக்கி அனுப்பப்பட வேண்டும் அல்லது இயக்கப்பட வேண்டும்.
hypo thalamus gland

**அடுத்த எழுத்து ர்.**

ர என்பது அணல் காத்த சக்கரம் உடலின் வெப்பத்தை கட்டுப்படுத்தும் வேலையை செய்கிறது. Thymus Gland - உடன் hypothalamus gland - இணைந்து உடலின் வெப்பத்தை தோலில் உள்ள வியர்வை சுரப்பிகளைக் கொண்ட, எப்பொழுதும் 37 திகிரி

Fahrenheit -ல் வைத்து இருக்கும்.



படம் 11.5 தைமஸ் சுரப்பியின் அமைப்பு


தைமஸ் சுரப்பியின் ஒரு பகுதி நாளமில்லாச் சுரப்பியாகவும் மறு பகுதி நிணநீர் உறுப்பாகவும் செயலாற்றக்கூடியது. இரட்டைக் கதுப்புடைய தைமஸ் சுரப்பி, இதயம் மற்றும் பெருந்தமனிக்கு மேல் மார்பெலும்பிற்குப் பின் அமைந்துள்ளது. அனாகதம் என்பது மணம் குறித்த ஒரு சொல். அதாவது நாம் எதிர்காலத்தை முன் அறிய முடியாததாக இருந்தாலும் மணம் என்ன சொல்கிறதோ ? அதன்படி இயங்கும் போது சுரப்பிகள் அனைத்தும் சரியான படி இயாங்கி எதிர்காலத்தை நாம் நினைத்த படி இயங்கும் தன்மைக்கு மாற்றக் கூடிய சக்கரம் அனாகதம், நம் மனம் இயங்கக் கூடிய தளம் இதயம். ஒவ்வொரு மூச்சின் வழியாகவும் உள்ளே எண்ணங்கள் வருகிறது. நாம் எண்னென்ன செய்ய வேண்டும் என நம்மைக் கட்டுப் படுத்துவதும் இந்த மூச்சின் வழியாக வரும் எண்ணங்கள் தான். நம் மூளையில் m e m o r y செல்களில் எண்ணங்கள் இருக்காது. இந்த பரந்தவெளியில் தான் எண்ணங்களாகிய கருத்துக்கள் நிறைந்து இருக்கிறது. அது தான் நமக்கு மூச்சின் வழியாக நுறையீரலுக்குள் புகுந்து இரத்தத்தில் கலந்து இதயத்துக்குள் செல்கிறது. நம் எண்ணங்களை வழி நடத்த இரத்தத்தின் வழியாக மூளைக்குச் சென்று நம் அறிவை பயன்படுத்தி இயங்குவோம். அதன் போக்கில் இயங்கினால், சூழ்நிலைகள் அமைந்து நல்லபடியாக நடக்கும். நாம் , நம் அறிவைக் கொண்டு மாற்ற நினைத்தால் மாட்டிக் கொள்வோம். நம் அறிவை பயன்படுத்தி எண்ணங்கள் என்ன சொல்கிறதோ? அதற்கு p l a n பண்ண வேண்டும். என்னம் சரியா?தவறா?

என்பதற்கு அறிவை பயன்படுத்தக் கூடாது.

ர என்பதன் வடிவில் ர என்பது கால் எனும் காற்றைக் குறிப்பது. என்பதை குறிப்பது. ர கீழே உள்ள கோடு இயங்குவதை குறிப்பது. எண்ணங்களை மூச்சின் வழியாக ஈர்த்து நம்மை இயங்க வைப்பதை குறித்த எழுத்து ர.

**அடுத்த எழுத்து ல.**

கழுத்தில் உள்ள கேடய சுரப்பி எனும் தைராய்டு சுரப்பிகள் தான் ல எனும் எழுத்தை குறித்தன.






கேடயச் சுரப்பி (Thyroid gland) என்பது உடலின் நாளமில்லா அமைப்பின் ஒரு பகுதியாகும். இது கழுத்தின் முன்புறத்தில் அமைந்துள்ளது. இது ஹார்மோன்களை உற்பத்தி செய்து, உடலின் பல முக்கிய செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துகிறது.

கேடயச் சுரப்பி, பட்டாம்பூச்சி வடிவில் அமைந்துள்ள ஒரு சுரப்பி. இது கழுத்தின் முன்புறத்தில் தோலின் கீழ் உள்ளது. வளர்சிதை மாற்றம் என்றால் நாம் உண்ணும் உணவில் இருக்கும் கொழுப்பு சத்தை நம் சதைகளில் சேர்த்து வைப்பதும், சாப்பாடு கிடைக்காத பொழுது சதைகளில் உள்ள கொழுப்பை கரைத்து உடலுக்கு கொடுப்பதும் தான் இந்த கேடய சுரப்பியின் வேலை. இதில் ஏதாவது பழுது ஏற்ப்பட்டால் உடல் பருமனாகவோ, அல்லது மிகவும் இளைத்தோ கானப்படும். உடலை சுத்திகரிப்பது இதன் வேலை. எனவே வி சுத்தி என இந்த சக்கரத்திற்குப் பெயர். . வி என்பது பரந்த என்ற பொருள் படும். ல வின் வடிவமும் தைராய்டு சுரப்பியின் வடிவமும் ஒன்று போல் இருக்கும்.

**அடுத்த எழுத்து வ.**

இந்த எழுத்து மணிப்பூரகம் எனும் சக்கர முடிச்சில் இயங்கும். மணி என்றாலே காலத்தைக் குறிப்பது. நம் உடலில் உள்ள உறுப்புகளின் செயல்பாடுகளை ஒரு சுழற்சி முறையில் ஒரு நாள் மற்றும் பருவத்துக்கு ஏற்றவாறும் இயங்க வைப்பது. இதை Peneal எனும் ஆனந்த சுரப்பியின் உதவியோடு. கணையம் சுரப்பி செயல் படுத்துகிறது. இறைப்பையின் கீழே , பித்த நீர்ப்பையின் அருகில் இருந்து செயல்படுகிறது.




1. கணையத்தின் முற்பகுதி
2. Uncinate process of pancreas
3. கணைய முடிச்சு
4. கணையத்தின உடல்
5. கணையத்தின் வெளி மேற்பரப்பு
6. கணையத்தின் உள் மேற்பரப்பு
7. Superior margin of  pancreas
8. Anterior margin of pancreas
9. Inferior margin of pancreas
10. கணயம் சுற்றி உள்ள உரை பெயர்  என்ன Omental tuber
11. Tail of pancreas
12. முன்சிறுகுடல்


கணையம்  (Pancreas) அல்லது சதையி அல்லது சதையம் என்பது மாந்தரின் உடலில் வயிற்றுப் பகுதியில் இரைப்பைக்குச்

சற்று கீழே இருக்கும் ஓர் உறுப்பு ஆகும். தென்னிலங்கையில் இது பல்குத்தி என்றும் அழைக்கப்படுகிறது. இது காரட், முள்ளங்கி போல் உருவத்துடன், சுமார் 20-25 செ.மீ நீளம் உடைய ஓர் உறுப்பு. இந்த உறுப்பானது உணவைச் செரிப்பதற்குப் பயன்படும் நொதியங்களைக் கொண்ட கணைய நீரைச் சுரக்கின்றது. அத்துடன் கணையத்தில் உடலுக்கு மிகத் தேவையான சில உயிரியல் இயக்குநீர்கள் சுரக்கின்றன. இன்சுலின், குளூக்கொகான் (g l u c o g o n ), சுரப்பி அமைப்புகளில் மட்டுப்படுத்தும் பணி செய்யும் தணிப்பியாகிய சோமட்டாசிட்டாடின் போன்ற இயக்குநீர்கள் சுரக்கின்றன.

இதனால் கணையமானது நொதியங்களைக் கொண்ட குழாய்வழி சுரப்பிநீரைச் செலுத்தும் சமிபாட்டுத்தொகுதியின் ஓர் அங்கமாகவும், இயக்குநீர்களைச் சுரக்கும் நாளமில்லாச் சுரப்பிகளைக் கொண்டிருப்பதனால், அகச்சுரப்பித் தொகுதியின் ஓர் அங்கமாகவும் இயங்குகின்றது. இந்த நொதியங்கள் கார்போஹைட்ரேட்டு, புரதம், கொழுப்பியம் (l i p i d ), குறைசெரிப்புநீர்மம் (சைம், C h y m e ) போன்றவற்றை பிரிக்க (சிதைவாக்க) உதவுகின்றன. இந்த இயங்கு நீர்கள் , இறைப்பைக்கும், சிறு குடலுக்கும் சென்று நாம் உண்ணும் உணவில் உள்ள புரதம், கொழுப்பு, சக்கரை என பிரித்து அதை ரத்தத்துடன் கலந்து உடலெங்கும் உள்ள உயிர் அணுக்களுக்கு கொண்டு செல்லும். இந்த எழுத்து மண்ணீரல் மற்றும் பித்தப்பையுடன் சேர்ந்து இயங்கும்.

**அடுத்த எழுத்து - சிறப்பு ழ்.**

இரண்டாவது ஆதாரமான சு வதி ஸ்தானம் என்றால் சுக்கிலம், சுரோணிதம் எனும் சுரப்பிகள் அமைந்திருக்கும் என





படம் 2.2 (அ) ஆண் இனப்பெருக்க மண்டல வரைபடம்

பொருள் பட இந்த வார்த்தை இருக்கும். சிறுநீரகத்தின் அருகே உள்ள அண்ணீரக சுரப்பி எனும் அட்ரீனல் சுரப்பி நம் உணர்ச்சிகளுக்கு ஏற்றவாறு இதில் நீர்கள் சுரக்கும்.

நாம் எதையாவது பார்த்து பயப்பட்டோம் என்றால் அட்ரீனல் சுரப்பியில் சுரக்கும் நீர் நமக்கு அந்த இடத்தில் இருந்து தப்பிப்பதற்கு உண்டான சத்துக்களுடன் கூடிய திரவங்கள் சுரந்து நம்மை இயங்க வைக்கும்.. தீவிர உந்துதலில் நம் உடல் இயங்க தயாராகி செய்து முடிக்கும் வரை சத்துக்கள் கிடைக்கும். அதே போல் தேவை இல்லாமல் பயம், கவலை, துக்கம், பெருமை, கோபம் போன்ற உணர்ச்சிகளுக்கு ஏற்றாற்போல் சுரக்கும் திரவங்கள் நம் உடலை பாதிப்படைய வைக்கும்.

ஆண் பெண் இணைதலின் போது, ஆண்களுக்கு சுக்கிலம் எனும் நீர் சுரந்து , விதைப்பையில் இருக்கும் விதையுடன் கலந்து சுனங்கி இயக்கமில்லாமல் இருந்த அதை ஊறவைத்து முளை விட்டு கருமுட்டைக்கு பீய்ச்சி அடிக்கப்படும். சுக்கிலமும், விதையும் கலந்த திரவம் தான் விந்து.





*படம் 2.7 மனித விந்து செல்லின் அமைப்பு*

இதே போல் பெண்களுக்கு, ஆண் பெண் இணைதலின் போது, உச்சத்தில் சுரோணிதம் எனும் நீர் சுரந்து அது விந்துவுடன் கலந்து கருமுட்டைக்கு சென்றால் அது ஆண் உருவம் பெரும். இதே சுரோணிதம் இல்லாமல் விந்து மட்டும் கருமுட்டையுடன் கலந்தால் அது பெண் உருவம் பெறும்.

இப்படி நம் உணர்ச்சிகளுக்கு (பயம், கோபம், கவலை, துக்கம், பெருமிதம்) ஏற்றாற்போல் வழ வழ என சுரக்கும் இந்த திரவங்களால் உடல் ஆரோக்கியத்தில் பாதிப்பு தான் அதிகம்.

அட்ரீனல் சுரப்பிகள் என்ன செய்கின்றன?




இரத்த அழுத்தம், உப்பு சமநிலையை பராமரிக்கவும், மன அழுத்த காலங்களில் உதவவும் அட்ரீனல் சுரப்பிகள் பல வகையான ஹார்மோன்களை சுரக்கின்றன. மனிதர்கள் அட்ரீனல் சுரப்பிகள் இல்லாமல் வாழ முடியாது, எனவே இரண்டு அட்ரீனல் சுரப்பிகளும் அகற்றப்பட்டால் (மிகவும் அரிதாகவே அவசியம்), நோயாளி தேவையான ஹார்மோன்களை வழங்க மருந்துகளையும் கூடுதல் மருந்துகளையும் எடுக்க வேண்டும்.

அட்ரீனல் சுரப்பி என்பது சிறுநீரகத்தின் மேல் அமைந்துள்ள ஒரு நாளமில்லா சுரப்பியாகும. ஆண்களுக்கு உச்சத்தில் சுரக்கும் சுக்கிலத்துடன் விதைப் பையில் இருக்கும் விதையும் சேர்ந்தால் அதன் பெயர் விந்து விதைப்பையில் உற்பத்தியான சுனங்கியிருந்த விதை சுக்கிலத்துடன் கலந்து விந்துவாகிறது. இந்த அட்ரீனல் சுரப்பியால் மகிழ்ச்சியாக இருந்தால் சுரக்கும் நீர் சுரோனிதம். கருமுட்டை வேறு சுரோனிதம் வேறு. உடல் இன்பத்தால் பொங்குவதுதான் ஒற்றைக்கொம்பு ெ என்பது அதனுடன் ா சேர்ந்தால் பொங்கி இயங்குவது என பொருள்.

**அடுத்த எழுத்து ற்**


ற் என்பது ஆண்களுக்கு விதைப்பையில் விதை உருவாக்கத்தையும். பெண்களுக்கு கருப்பையில் கரு முட்டை உருவாக்கத்தைப் பற்றியும் குறித்த எழுத்து. விதை என்பது ய என்ற தலையில் உள்ள மூன்று சுரப்பிகளிலிருந்து கீழே இறங்கி விதைப்பைக்கு செல்வதை குறிக்கின்றது. அதே போல்



பெண்களுக்கு மேலே உள்ள மூன்று சுரப்பிகளிலிருந்து கரு முட்டை கீழே இறங்கி கருப்பைக்கு செல்வதை குறிக்கின்றது.

நம் தமிழ் மரபில் ஒவ்வொரு ஊரிலும் அரச மரத்தடியில் புள்ளையார் கோயில் இருக்கும். அது கிழக்குப் பார்த்து இருக்கும்.

எனவே அந்த ஊருக்கு புதிதாக வருபவர்களுக்கு யாரிடமும் கேட்காமல், கிழக்கு திசையை அறிந்து கொள்ளலாம். மற்றும் இந்த மாதிரி பிள்ளையார் கோயில் அந்த ஊரில் இருந்தால் தமிழர்கள் அந்த ஊரில் இருக்கிறார்கள் என பொருள். உலகில் எங்கே சென்றாலும் இந்த பிள்ளையார் கோயில் இருந்தால் அங்கு தமிழர்கள் இருக்கிறார்கள் என பொருள்படும். தங்கள் ஊர்களில் உற்பத்தியாகும். பொருட்களை வேறு ஊர்களுக்குச் சென்று வியாபாரம் செய்ய வண்டிகளில் ஏற்றிக் கொண்டு, பாதுகாப்புக்காக வீரர்களை அழைத்துச் சென்று எங்கு நீர் நிலைகள் தங்குவதற்கு வசதியாக இருக்கிறதோ? அங்கு இந்த பிள்ளையார் கோயில் உருவாக்கி , அங்கு தங்கி சிரமபரிகாரம் செய்து அடுத்த ஊர்களுக்குச் செல்வார்கள். இவர்களுடன் உலகில் உள்ள வெவ்வேறு பருவங்களை, வெவ்வேறு மிருகங்களையும், வெவ்வேறு தாவரங்கள் மற்றும் மூலிகைகள் என ஆராய்ச்சி செய்ய சித்தர்களும் பயணம் செய்வார்கள். வியாபாரிகளுக்கும் சித்தர்கள் கூட வருவது பயனுள்ளதாக அமையும். பிள்ளையார் சிலை என்பது வியாபாரிகளையும்,





சித்தர்களையும் குறித்தது தான். சித்தர்கள் என்பவர்கள் சித்தம் பயன்படுத்துபவர்கள்.

சித்தம் என்பது தானாக பணியாற்றுவது. எதற்கும் பதட்டப்படாமல் அமைதியாகவும், விரைந்தும் செயல் ஆற்றுபவர்கள் சித்தர்கள். வியாபாரிகள் பொருளாதாரத்திற்காக ஊர் ஊராக கணங்களுடன் செல்பவர்கள். வயிறு தொந்தியாக இருக்கும். இரண்டையும் இணைத்து பிள்ளையார் ஆக்கிவிட்டார்கள். ஆனால் பிள்ளையாருக்கு அர்த்தம் உ என்பது தான். உலகில் உயிர் உற்பத்தி ஆக ஆரம்பித்த அந்த நாதமும் விந்துவும் கலந்த தருணம், தான் பிள்ளையார் என்பது. அதுதான் பிள்ளையார் சுழி.




பிள்ளையார் கோயில்களில் பிள்ளையாரின் அருகில் மூன்று வட்டம் கொண்ட பாம்பு பிண்ணிப் பினைந்தது போல நீளமான கல் வைத்து இருப்பார்கள்.

அது ஆண்களின் விதைப்பைக்குள் சுனங்கி இருக்கும் விதையைக் குறித்தது தான். சுனங்கி அசையாமல் , நெளியாமல் இருந்த விதை சுக்கிலம் கலந்து உயிர் பெற்று நீந்தி கருமுட்டையை சென்று அடையும்.



இந்த விதையைத்தான் வால் ஆகவும், வேல் ஆகவும் முருகன் அறிந்து அதை கையில் வைத்து இருக்கிறார். இந்த வால் என்பது நம் முதுகுத்தண்டு தான். அதில் உள்ள ஆறு முடிச்சுகள் தான் ஆதாரங்களாக உடல் வளர்க்கிறது. இந்த வால் அறிவன் தான் கற்றதனால் ஆன பயன்.

இது போல பெண்களின் கருமுட்டை உற்பத்தி 13 வயதுக்கு மேல் பெண்கள் பருவமடைந்தவுடன் , ஆக ஆரம்பிக்கும். நிலா பூமியை 360 திகிரி சுற்றி வர 27 நாட்கள் ஆகும். அதை ஒரு திங்கள் என்போம். பெண்களின் கருப்பையில் மாதம் ஒரு கருமுட்டை உற்பத்தி ஆகி 27 நாட்கள் கருத்தரிக்க எதிர்பார்த்து காத்திருக்கும். கருத்தரிக்காவிட்டால் அது சிதைந்து உதிரமாக 3 நாட்களில் வெளியேறி விடும். மீண்டும் ஒரு முட்டை உற்பத்தி ஆகி மீண்டும் ஒரு மாதம் காத்திருந்து சிதைந்த உதிரமாக வெளியேறும்.




இப்படி 55 வயது வரை  மாதம் ஒருமுறை இந்த நிகழ்வு தொடர்ந்து நடைபெறும். இந்த கருமுட்டையில் எப்பொழுது கருத்தரிக்க ஆண்களின் விந்து வந்து சேர்கிறதோ? அந்த உடல் எப்படி வளர வேண்டும் எனும் அனைத்து தகவல்களும் (கருத்துக்களும்) அந்த கருமுட்டையில் பொதிந்து இருக்கும். விந்துவுடன், பெண்களின் சுரோணிதமும் கலந்து கருத்தரித்தால் அது ஆண்களுக்குண்டான உடலாக மாறும். சுரோணிதம் கலக்காவிட்டால் அந்த உடல் பெண்ணாக வளரும். இப்படி ற் எனும் எழுத்து விதைப்பை, கருப்பையை குறித்த எழுத்து இந்த மூலாதாரம் எனும்  முதல் சக்கரம் முதல் பருவமான குழந்தைப் பருவத்தைக் குறித்தது. இதன் கோள் சனி. கருப்பு நிறம். வாலை தெய்வம் , அல்லது காளி.

**அடுத்த எழுத்து ன்.**

மூலாதரமான இனப்பெருக்க உறுப்புகளான ஆண்களுக்கு விதைப்பையும், பெண்களுக்கு கருப்பையும் இறைவனால் படைக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த கருப்பைக்குள் விந்து சேர்ந்து கருவாக குழந்தையாக வளர முறைப்படி பெண்கள் கருவுற நம் முன்னோர்களால் உருவாக்கப்பட்ட ஏற்பாடு தான் திருமணம். ஒரு ஆணுக்கு ஒரு பெண் என பெற்றோர்களால், தன் குழந்தைகளை , பேணி வளர்த்து , இரண்டாம் பருவம் முடிந்து ஏற்ற வரன் பார்த்து திருமணம் செய்து வைப்பது நமது முன்னோர்களின் ஆகச் சிறந்த ஏற்பாடு திருமணம் முடிந்து பெண்ணையும், மாப்பிள்ளையும் முதலிரவுக்கு , நேரம் காலம் பார்த்து ஏற்பாடு செய்வார்கள்.

மூலாதார உறுப்பின் துணை உறுப்பாக ஆண்களுக்கு ஆண்குறியும், பெண்களுக்கு யோனியும் , மதன பீடமும். இருக்கும். இவை ஆண் பெண் ஈர்ப்பில் சரியாக பொருந்தி இன்பமாக அடுத்த தலைமுறையை உருவாக்கும் இறைவனின் ஆகச்சிறந்த படைப்பு. நம்முன்னோர்கள் அதை காமம் என மதித்து நமது ஊர்களுக்கே கதிர்காமம் என பெயரிட்டவர்கள். திருமணம எனும் பந்தத்தில் ஆண் பெண் இருவரையும் இணைய வைத்து நம் குடும்பம் தழைக்க , அடுத்த தலைமுறையை உருவாக்கும், நம் இனப்பெருக்க உறுப்புகளை, நாமும், சரியாக பேணி பாதுகாக்க வேண்டும். அது இரத்தத்தில் இருந்து நீர் கழிவுகளை வெளியேற்றும் உறுப்பாகவும் செயல்படும்.

இந்த உறுப்புகள் பொதுவாக தளர்ந்து இருக்கும். ஆண் பெண் இணைதலின் போது விறைப்படையும் தன்மை கொண்டது. எனவே தான் இரண்டு இணை கொம்புகள் போட்டு ஒரு கோடு போடப்பட்டு இருக்கிறது. ன் - க்கு

இப்படி உயிர் எழுத்துக்கும், மெய் எழுத்துக்கும் அதன் வடிவத்திற்கு பொருள் உருவாக்கி, அனைத்து அறிவியல் உண்மைகளையும், அடையாளப்படுத்தி, 3600 ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர்கள் நமக்கு கொடுத்து இருக்கிறார்கள்.

இந்த ஏற்பாடு mind mapping - க்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

நமக்கு 247 எழுத்துக்களும் தெரியும். அதன் பொருளையும், சரியாக வரிசைக் கிரமமாக நம் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுத்து விட்டால், வாழ்வியல் மிக எளிதாகிவிடும்.

நம் வீட்டில் எந்த நிகழ்வாக இருந்தாலும், நமது வீட்டில் இருக்கும் பெரியவர்களின் ஆலோசனையுடன், நம்மை உண்மையிலேயே நேசிக்கும் சிறு குழுவினரை அழைத்து அவர்கள் முன்னிலையில் எளிமையாக , பழம், பாக்கு, வெத்திலை, ஊதுவத்தி , தேங்காய், கல்பூரம் , பூக்கள், என பூசை பொருளை வைத்து பிள்ளையார் பிடித்து, தேங்காய் உடைத்து, சிறு பூசை செய்து வழிபட்டாலே போதும். நமக்குத் தேவையான பொருள் எதை வேண்டுமானாலும் நம் திறமைக்கு ஏற்ப, வருமானத்திற்கு ஏற்ப, வைத்துக் கொள்ளலாம். வாழ்வியல் சிறப்பாக இருக்க வேண்டும். கடனில் மூழ்கக் கூடாது. இதையும் நம் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.

நம் குழந்தைகளுக்கு இந்த தமிழ் எழுத்துக்களின் மகத்துவங்களை சரியாக புரிய வைத்து விட்டால், மருந்து தேவையே இருக்காது. திருமந்திரத்தில் திருமூலர், உயிர் வளர்த்தேனே, உடல் வளர்த்தேனா? என உடலின் அருமையை புரிந்து கொண்டு உடலைப் பேணுவது மிகவும் முதன்மையானது. என்கிறார்.

திருவள்ளுவரும் மருந்தென வேண்டாவாம் என்று தான் கூறுகிறார். உடல் உள் உறுப்புகளைப் பற்றி தெரிந்தால், புரிதல் இருந்தால், நமக்கு கிடைத்த இந்த உடல் எனும் செல்வத்தை பாதுகாத்தால், மருந்து தேவை இல்லை. பசித்து சாப்பிடுவது, தாகம் எடுக்கும் போது தண்ணீர், சரியான உறக்கம், காலை எழுந்தவுடன் குளியல், அளவான வேலை, நண்பர்கள், உற்றார் உறவினர், குழந்தைகள் என இன்பமாக வாழ்ந்து, தேவை இல்லாத உணர்ச்சிகளுக்கு ஆட்படாமல் இருந்தாலே போதும்.

இந்த உயிர் எழுத்துக்களும், மெய் எழுத்துக்களும், உடல் உருவாக உயிர் பெற்று மனிதனாக வாழ்ந்து இந்த இயற்கையை அறிந்து, புரிந்து நமக்கு எடுத்துச் சொன்ன அந்த ஆதி பகவன் வருவதற்கு முன்னரே இந்த எழுத்துக்கள் இருந்து இருக்கிறது. என்பது தான் திருக்குறளின் முதல் குறளின் பொருள்.. இன்னும், உயிர் மெய் எழுத்துக்கள் + ஆயுத எழுத்து 217 இருக்கிறது.


**முடிவுரை:**

கடந்த 10 வருசங்களாக விண்ணியலும் வாழ்வியலும் குழுவினர் இணைந்து, வானில் பார்த்தவைகளின் தொகுப்பு தான் இந்த புத்தகம். நம் முன்னோர்களின் அறிவு வியக்க வைக்கிறது. இன்னும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விடையங்கள் நிறைய இருக்கிறது. வாழ்நாள் போதாது . கற்றல் முடியவே முடியாது. இன்னும் இந்த புத்தகங்கள் தொடரும். கர்ப்ப ஓட்டம் பற்றியும், திருக்குறளில் இருக்கும் அதிகாரங்களுக்கும் சோதிட பலன்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியும், சிவவாக்கியர் பாடல் விளக்க உரையும் என அது தொடரும்.

மீண்டும் சந்திப்போம்.

இந்த புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துக்கள், மாற்ற வேண்டிய வரிகள், கணக்குகள் என எது இருந்தாலும் VinniyalumVazhviyalum@gmail.com எனும் மின்னஞ்சலில் பதிவிடுங்கள். சரியாக இருக்கும் பட்சத்தில் அது திருத்தி அமைக்கப்படும்.

நன்றி.






## நிலா பயிற்சி மையம்

ஆழியார்

பொள்ளாச்சி